விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 24
ஒலி 342 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 09 ஞாயிற்றுக்கிழமை (26.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=


யாழ்.பல்கலை, நல்லூர், கோப்பாயில்

## நினைவேந்தலை தடை செய்ய கோரி பொலிஸார் மனுத் தாக்கல்

### நவம்பர் 27 காலை வழக்கு விசாரணை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் மாவீரர் தின நிகழ்வுகளை தடை செய்ய உத்தரவிடக் கோரி யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளி 19

## தலைவர் பிரபாகரனின் பிறந்த நாள் இன்று



(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் 69ஆவது பிறந்த நாள் இன்றாகும்.
2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட முன்னர் 19

## மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிறுத்தம்

### ஏற்பாட்டாளர் பொலிஸாரால் கைது

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு, வெல்லாவெளியில் முன்னெடுக்கப்படவிருந்த மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வானது பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டதுடன், அதனை ஏற்பாடு செய்திருந்த ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உப தலைவர் என்.நகுலேஸ் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். 19

மட்டக்களப்பு வாகரையில்

## துயிலும் இல்லம் சேதமாக்கப்பட்டது

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு, வாகரையிலுள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் நினைவுக் கல்வெட்டுக்களையும் கம்பி வேலி அமைக்கப்பட்டிருந்த கொங்கிறீட் தூண்களையும் இனந்தெரியாத நபர்கள் 19

மாவீரர் நாள் நாளை

# நினைவேந்தலுக்கு துயிலுமில்லங்கள் தயார்

(யாழ்ப்பாணம்)
யுத்தத்தின்போது உயிரிழந்த மாவீரர்களை நினைவேந்தும் மாவீரர் நாள் நாளை.
மாவீரர்களை அஞ்சலிப்பதற்கு துயிலும் இல்லங்கள் தயார் நிலையில் உள்ளன.
(04ஆம் பக்கம் பார்க்க)


(கோப்புப் படம்)

## மன்னாரில் நினைவேந்தலுக்கு நீதிமன்றம் அனுமதி

(மன்னார்)
மன்னார், ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் நாளை 27ஆம் திகதி இடம் பெறவுள்ள உயிர் நீத்தவர்களுக்கான நினைவேந்தலுக்கு எதிராக அடம்பன் பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தில் நேற்று தடை உத்தரவு கோரியிருந்த நிலையில், நீதிமன்றமானது உயிரிழந்த உறவுகளை நினைவுகூர 19

27ஆம் திகதி முதல்

## வடக்கில் தொடர் மழை

(யாழ்ப்பாணம்)
வடக்குக் கிழக்கில் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் ஒரு வாரத்துக்கு கடும் மழை பெய்யும் என 19

## மாவீரர் நினைவேந்தலை கிளிநொச்சியில் தடை செய்க

### பொலிஸாரின் மனு நீதிமன்றால் நிராகரிப்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சியில் மாவீரர் நினைவேந்தலுக்கு 7 பொலிஸ் நிலையங்களால் தடை விதிக்க கோரும் மனு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றால் நேற்று நிராகரிக்கப்பட்டது.
கிளிநொச்சி மாவட்டத்தின் கனகபுரம், முழங்காவில், தேராவில் துயிலு 19

NLB
NATIONAL LOTTERIES
அறுபதுக்கு அறுபது பரிசுகளை வெல்லுங்கள்


மில்லியன் பரிசுகள்
ஐந்து லட்சம் பரிசுகள்
தங்கக் காசுகள்
60 வீதம்
ரூபா 5,000 பரிசுகள் 10,000
சீட்டிழுக்கப்படும் திகதி டிசம்பர் 28
(C-2172)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொர்க்கம் திருமண சேவை

- அமெரிக்காவில் வசிக்கும் 29 வயது R.C மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணை இலங்கையில் (யாழ்ப்பாணம்) எதிர்பார்க்கின்றோம்.
- பிரான்ஸில் வசிக்கும் 33 வயது கேட்டை நட்சத்திரமுடைய மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.
- 1995 இல் பிறந்த பரணி நட்சத்திரமுடைய (District Public health Inspector) மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.

(18001)

தொடர்பு கொள்ள சொர்க்கம் திருமண சேவை

**001 416 666 1855** (கனடா)
**077 887 6969**
**077 650 5097** (யாழ்ப்பாணம்)

## பலதரப்பட்ட வேலை வாய்ப்புகள்

யாழ் மத்தியில் பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகளில் பணி புரிவதற்கு Administration Officer, CCTV Technician, Electrician, Web Developer, கணினி துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் Online இல் Data Entry வேலை செய்வதற்கான பணியாளர்கள் தேவை.

(17997)

**076 989 9977**
**077 868 8517**

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும்.

(C-7727)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

## JAFFNA HINDU COLLEGE
Old Boys Chess Association
**CHESS TRAINING CENTER**

CHESS

### சதுரங்க பயிற்சி

பிரிவு 1 : 10 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கானது
ஆரம்பம் : 26.11.2023 பிற்பகல் 6.00 மணி
பிரிவு 2 : வயது4 முதல் 10 வரையான மாணவர்களுக்கானது
ஆரம்பம் : 26.11.2023 பிற்பகல் 5.00 மணி
இடம் : யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

- வடமாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் இணைந்துகொள்ள முடியும்.
- உலகத் தரம் வாய்ந்த பாடத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.
- சிறப்பு தேர்ச்சி பெற்ற பயிற்றுவிப்பாளர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு –
பொருளாளர் (JHC-OBCA) – 077 566 0416

(17990)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




2023ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 180 புள்ளிகளைப் பெற்று கிளிநொச்சி வடக்கு வலயத்தில் முதலிடத்தினைப் பெற்ற கிளி/பளை மாசார் அ.த.க பாடசாலை மாணவன்

செல்வன்
**யசோதாஸ் கர்ஷாந்**
(180 புள்ளிகள்)

அவர்களை மனமாரப் பாராட்டி மேலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்துகின்றோம்.

(C-7724)

வாழ்த்துவோர் -
நியூ எக்சலன்ட் கல்வி நிலையம் - பளை

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378**
**076 097 3127**

## காணி விற்பனைக்கு

மீசாலை மேற்கு டச்சு வீதியிலுள்ள நாற்புறமும் சுற்றுமதிலுடன் கூடிய நான்கு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

(17709)

**077 560 7641**
**077 081 4874**

## PickMe Taxi சேவை

நீங்கள் உங்கள் வாகனங்களை எமது சேவையில் இல்வசமாக இணைத்துக்கொள்ளவும்.
( Bike, Auto, Car, Van, Truck )

(17998)

**077 473 7737**

## மணமகிழ் மணவாழ்வில்

**50** ஆண்டுகள் பொன்விழா வாழ்த்து

26.11.2023 ஞாயிற்றுக்கிழமை

திரு.திருமதி
**இரத்தினசிங்கம் நவரத்தினராணி**

“வாழ்த்த வயதில்லை வணங்குகிறோம் பாதம்தொட்டு ”



(17995)

50th Happy Anniversary

வாழ்த்துவோர்.
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அராஜகத்துக்கு உடன் முடிவு கட்டுங்கள்

## ஜனாதிபதியிடம் எதிர்க்கட்சி வலியுறுத்து

**(கொழும்பு)**

**வடக்கு உட்பட நாட்டின் பல இடங்களில் பொலிஸாரின் அராஜகம் தொடர்ந்து வருகின்றது. அவர்களால் சந்தேகநபர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டு வருகின்றார்கள். இதற்கு எதிராக ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்தியுள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மக்களின் பாதுகாவலர்களாக இருக்க வேண்டிய பொலி ஸார் தொடர்ந்தும் அராஜகம் புரிந்து வருகின்றனர்.


அவர்களால் மக்கள் பிரதிநிதிகளுக்கு கூட அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

சந்தேகநபர்களைக் கொடூர சித்திரவதைகள் மூலம் அவர்கள் கொலை செய்து வருகின்றனர்.

அண்மையில் கூட யாழ்ப்பாணத்தில் நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞர் பொலிஸாரின் மோசமான சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இதற்கு ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# வெள்ளநீரில் மூழ்கிய செல்லக்கதிர்காமம் கோயில்



(மொனராகலை)

கதிர்காமத்தில் கொட்டித் தீர்த்த கனமழையால் இலங்கையில் மிகவும் புகழ் பெற்ற புனித பாதயாத்திரை தலமான செல்லக்கதிர்காமம் கோயில் வெள்ள நீரில் மூழ்கியுள்ளது.

தொடர்ச்சியான மழைவீழ்ச்சியின் காரணமாக தற்போது நீர்மட்டம் வெகுவாக அதிகரித்துள்ள நிலையிலேயே ஆலயம் நீரில் மூழ்கியுள்ளது. (நி-5)

# வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு பொருட்களை அனுப்பும் முறை இடைநிறுத்தம்

(கொழும்பு)


இலங்கைக்கு வெளிநாடுகளில் இருந்து பொருட்களை அனுப்பும் முறையை (Door to Door) உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு இலங்கை சுங்க திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறையின் மூலம் தனியார் போக்குவரத்து முகவர் நிலையங்கள் நேரடியாக குறித்த நபர்களின் வீடுகளுக்கு பொருட்களை அனுப்பிவைக்கின்றன.

எனினும், பொதுமக்களின் தொடர்ச்சியான முறைப்பாடுகள் மற்றும் அதன் ஊடாக மேற்கொள்ளப்படும் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு, இந்த விநியோக முறையை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## யாழ்ப்பாணத்தில் தனது புதிய கிளையின் மூலம், சிறந்த இமேஜிங் உலகுக்கான கதவைத் திறந்துள்ளதுடன் தனது இருப்பையும் உறுதிசெய்துள்ளது

CameraLK









இலங்கையின் முன்னணி கேமரா விற்பனை நிறுவனமான CameraLK, தனது மூன்றாவது கிளையை யாழ்ப்பாணத்தில் திறந்துள்ளது. வட மாகாணத்தில் உள்ள புகைப்பட ஆர்வலர்களுக்கு உயர்தர கேமரா, மற்றும் உபகரணங்கள், துணைக்கருவிகளை வழங்குவதற்கான நிறுவனத்தின் உறுதிப்பாட்டில் குறிப்பிடத்தக்க மைல்கல்லாக இக் காட்சியறை அமைந்துள்ளது. இலங்கை முழுவதும் பரந்த வாடிக்கையாளர் தளத்தை அடைவதற்கான CameraLK இன் மூலோபாய விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியே யாழ்ப்பாணக் கிளையின் தொடக்கமாகும்.

CameraLK ஊழியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் முன்னிலையில் RMDC மற்றும் SONY விற்பனைத் தலைவர் Stanley Tan, Sony, RMDC DI மற்றும் SONY சந்தைப்படுத்தல் தலைவர் கரண் சம், CameraLK இன் முகாமைத்துவப் பணிப்பாளர் அனுஷ்கா குணசிங்க ஆகியோரால் புதிய கிளை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுர்க்கத்தில், முதலாம் தளத்தில் இலக்கம் 9 இல் அமைந்துள்ள புதிய கிளை, விசாலமான உட்புறங்களைக் கொண்டுள்ளது, வாடிக்கையாளர்கள் தங்கள் தேவைகளுக்கு ஏற்ற சரியான கேமரா உபகரணங்களை ஆராய்ந்து கண்டுபிடிக்க அனுமதிக்கிறது. உயர்தர DSLR கேமராக்கள், பல்துறை கண்ணாடியில்லா கேமராக்கள், வசதியான பொயின்ட் அண்ட் ஷூட் கேமராக்கள் மற்றும் பரந்த அளவிலான கேமரா பாகங்கள் ஆகியவற்றின் விரிவான தொகுப்புடன், CameraLK இன் யாழ்ப்பாணத்தில் உள்ள புதிய கிளை வாடிக்கையாளர்களுக்கு சமீபத்திய போக்குகள் மற்றும் பிரீமியம் தயாரிப்புகளை ஒரே கூரையின் கீழ் வழங்குகிறது. அவ் வகையில் வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியான அனுபவத்தை வழங்குகின்றது.

CameraLK இன் முகாமைத்துவப் பணிப்பாளர் அனுஷ்கா குணசிங்க, கருத்துக் கூறுகையில் "CameraLK ஐ யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், வட மாகாணத்தில் உள்ள துடிப்பான புகைப்படக் கலைஞர்கள் மற்றும் ஆர்வலர்கள் ஆகியோருக்கு எங்கள் கிளைகளை விரிவுபடுத்துகிறோம். இந்த புதிய கிளை எங்களின் சான்றாகும். சிறந்த வாடிக்கையாளர் சேவையுடன், சிறந்த வர்த்தக நாமங்களின் சிறந்த மற்றும் புதிய தயாரிப்புகளை நியாயமான விலைகளில் வழங்குவதற்கான அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம்."

CameraLK இன் இணையத் தளமான www.cameralk.com வசதியான ஷொப்பிங் அனுபவத்தை வழங்குகிறது, வாடிக்கையாளர்களுக்கு ஒரு சில கிளிக்குகளில் பரந்த அளவிலான தயாரிப்புகளை ஆராயவும் ஆர்டர் செய்யவும் அனுமதிக்கிறது. தகவல்கள் மற்றும் ஆர்டர்களுக்கு, வாடிக்கையாளர்கள் CameraLK இன் யாழ்ப்பாணக் கிளையை நேரடியாக 077 139 7872 மற்றும் 077 118 7870 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

2010இல் நிறுவப்பட்ட, CameraLK தெற்காசியாவின் மிகப்பெரிய கேமரா விற்பனை நிலையம் மற்றும் மிகப்பெரிய ஆன்லைன் ஸ்டோர் ஆகும். CameraLK நீண்ட காலமாக இலங்கையின் புகைப்படத் துறையில் சிறந்த மற்றும் புதிய தயாரிப்புகள், தகவலறிந்த இமேஜிங் நிபுணர்கள், சிறந்த வாடிக்கையாளர் சேவை மற்றும் [illegible] விலை [illegible] ஆதாரமாக அறியப்படுகிறது. Canon, Nikon, Sony, Sigma, Tamron, Tokina, DJI, GoPro, Profotto மற்றும் Wescott போன்ற பெரிய உற்பத்தியாளர்களிடமிருந்து CameraLK இலங்கை முழுவதும் உள்ள கடைகளில் 5,000 க்கும் மேற்பட்ட தயாரிப்புகளைக் கொண்டுள்ளது. கொழும்பு மற்றும் கண்டியில் தற்போதுள்ள கிளைகளுடன் இலங்கைதீவு முழுவதும் தனது இருப்பினை ஆன்லைன் ஸ்டோர் மூலம், CameraLK உறுதி செய்கின்றது.



Anushka Gunasinghe
Director CameraLK

(சி-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றக்பி வீரர் விபத்தில் உயிரிழப்பு

தென்னாபிரிக்காவின் முன்னாள் றக்பி வீரரான ஹன்னஸ் ஸ்ட்ரைடோம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கார் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

58 வயதான இவர் 1995 ஆம் ஆண்டில் றக்பி உலகக் கிண்ணத்தை வென்ற ஸ்பி ரிங்போக் அணியின் உறுப்பினர் ஆவார். (நி-5-6)

## நினைவேந்தலு...

விடுதலைப் போராட்டத்தில் ஈடு பட்டு தமது இன்னுயிரை போராட்டக்களத்தில் தியாகம் செய்த முதலாவது மாவீரர் சங்கரின் நினைவாக, அவர் உயிரிழந்த கார்த்திகை 27ஆம் திகதி, மாவீரர் தினமாக 1987ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது.

அன்றிலிருந்து தமிழர் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் தமிழீழ விடுதலைக்காய் உயிர் தியாகம் செய்த மாவீரர்களை நினைவுகூரும் அஞ்சலிகள் நடைபெற்றுவருகின்றன.

அந்த வகையில் மாவீரர் வார நிகழ்வுகளை நடத்துவதற்குத் தடை விதிக்கக் கோரி, சில பொலிஸ் நிலையங்கள் நீதிமன்றங்களில் அனுமதி கோரியிருந்தபோதிலும் அவை நீதி மன்றங்களினால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

தமிழர் தாயகத்தில் மாவீரர்நாளை நினைவேந்துவதற்கு துயிலுமில்லங்கள் அனைத்திலும் ஏற்பாடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. (ம-7)


## நாகபூஷணி திருமண சேவை

உள்நாட்டு/வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளன. மிகப் பொருத்தமான ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்யப்பட்டு உடன் தரப்பட்டு திருமணம் நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.

**இல.264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**021 222 9306,**
**077 138 7596, 071 999 9306**

(18006)



## தேவை

யாழ்ப்பாணத்தில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு

- **உதவி முகாமையாளர்(அரச/அரச சார்பற்ற 10 வருட அனுபவத்துடன், ஓய்வு நிலையில் உள்ளோரும் விண்ணப்பிக்கலாம்)**
- **வெளிக்கள உத்தியோகத்தர்**

தொடர்புகளுக்கு

**077 896 0281**

(18009)



## விற்பனைக்கு





**உயரம் 6 அடி, முன்பக்கம் மூன்றரை அடி, பக்கம் ஒன்றரை அடி ரூபா 50,000/=**

**சலூன், பியூற்றி பார்லருக்கு சுவரில் பொருத்தக்கூடிய கண்ணாடி**
**பெரியது அளவு 56" X 26" ரூ.8000/=**
**சிறியது 56" X 17" ரூ 7000/=**

(C-7729)

**077 7110 383**




## Classes For Chemistry
**(English & Tamil medium Classes)**

**Individual & Group Classes**
**2023,2024,2025 Batches**
**Theory & Paper Classes**

Contact number (18002)
**021 222 0446**


## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**வேலுப்பிள்ளை பாலசிங்கம்**
பழம் வீதி, ஆறுகால்மடம், யாழ்ப்பாணம்.


பிறப்பு : 25.12.1949
இறப்பு : 25.11.2023

எங்களது பாசமிகு மாமனாரின் மரணச்செய்தி அறிந்து துயர்கொள்கின்றோம். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் எருக்கலம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

தகவல் - திரு. சுரேஸ்குமார் குடும்பத்தினர்
மருமகன் (பேர்லின், ஜேர்மனி)

(18003)

## மரண அறிவித்தல்



பிறப்பு 07 . 10 . 1930

இறப்பு 25 . 11 . 2023

# கந்தர் நடராசா

வடமராட்சி வதிரியைப் பிறப்பிடமாகவும் தென்மராட்சி கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட க.நடராசா அவர்கள் நேற்று (25.11.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற "செல்வரத்தினம்" அவர்களின் அன்புக் கணவரும் ஸ்ரீகாந்தன், கருணாவதி, பிறேமாவதி, லீலாவதி, ஜெயகாந்தன், புஸ்பவதி, மாலாவதி, சந்திரகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"செல்வ வாசா"
கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி.

தகவல் - குடும்பத்தினர்
077 826 9846,
075 832 1990, 077 666 0699

(18011)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**கோணேஸ்வரன் சுநீதி**

பிறப்பு 07.10.1968
இறப்பு 22.11.2018



நித்தமும் நினைவுடன் நாம் வாழ
அத்தனை நலன்களும் எமக்காக்கி
பத்திரமாய் எம்மை வளர்த்தீர்களே
ஐந்தாண்டு ஆனதென்ன விரைவினிலே
காலங்கள் பல கடந்தாலும்
என்றும் எம் மனதில்
காவியமாய் இருப்பீர்கள்

மண்டைதீவு 2 ஆம் வட்டாரம்

நீங்கா நினைவுகளுடன் குடும்பத்தினர்

(18008)

## கண்ணீர் அஞ்சலி



ஈழத்தின் புகழ் பூத்த நாதஸ்வர வித்துவான்

**திரு. ஜெகநாதன் சிவதாசன்**

அவர்களின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கும் மற்றும் கலை உலகுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இணுவையூர்
வி.கே.குகானந்தன்
முன்னாள் உறுப்பினர் நல்லூர் பிரதேச சபை,
தலைவர் ரசிகபிரியா சபா கலை வளர்ச்சி மையம் இணுவில்

(C-7728)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச சேவை வெற்றிடங்களை நிரப்ப கோரிக்கை

(கொழும்பு)

முழு அரச சேவையிலும் பாதி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அமைச்சரவையின் அனுமதியை கோரியுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான 6 பேர் கொண்ட அதிகாரிகள் குழு, ஆட்சேர்ப்பு செயல்முறையை மீளாய்வு செய்வதற்காக அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

அந்த அறிக்கையின்படி, அடையாளம் காணப்பட்ட மொத்த பொது சேவை வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து முந்நூற்று இருபத்து நான்கு ஆகும்.

ஆனால் அறுபத்து ஏழாயிரத்து எழுநூற்று எட்டு வெற்றிடங்கள் மிகவும் அத்தியாவசியமான வெற்றிடங்களாக முன்னுரிமை அடிப்படையில் நிரப்பப்பட வேண்டியவை என சம்பந்தப்பட்ட குழு அமைச்சரவைக்கு பரிந்துரை செய்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் வரம்புகள் குறித்து எவ்வித கவனமும் செலுத்தாமல் கட்டுப்படியாகாத எண்ணிக்கையிலான மக்கள் அரச சேவைக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால் அந்த குழுவிற்கு வழங்கப்படும் மாதாந்த சம்பளத்திற்கு ஏற்ற வகையில் எந்தவொரு பங்களிப்பும் அவர்கள் பெறுவதில்லை எனவும் சம்பந்தப்பட்ட குழு வெளிப்படுத்தியுள்ளது. (நி-5)


# நூறாவது அகவைநாள் நினைவேந்தல் நிகழ்வு

## அமரர். பண்டிதர் வித்துவான் குமாரசாமி

அவர்களின் (1923-2023)



நயினை மண் பெற்றெடுத்த பெரியோனைப் பெரிதுவந்து
நூறாண்டு அகவைதனை நாம் தொழுது நிற்கின்றோம்
பேறாகி வந்த எம் தந்தையே எம் வேராகி நிற்கின்ற வித்தகரே
ஊரோடும் உறவோடும் உள்ளன்பால் இணைந்து–எம்
தவப்பயனால் தந்தை என உயர்நெறியில் வாழ்ந்தவரே
நினைவேந்தி நின்று சேவடிகள் போற்றுகின்றோம்
நினைவேந்தி நின்று சேவடிகள் போற்றுகின்றோம்.

தாய் மொழியை மறந்தறியா சான்றோனைத் தொழுகின்றோம்
சேய்கள் எமை வளர்த்தெடுத்த பாங்குதனை நினைக்கின்றோம்
ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் அள்ளி அள்ளி
எல்லோர்க்கும் அன்போடு சொரிந்தவரே
கல்விச்சாலையென பல்கலைக்கழகமென
சொல்லேர் உழவனாய் நடமாடித் திரிந்தவரே
எல்லைகள் அற்ற கல்வி வானிலே எல்லோர்க்கும்
பல்லாண்டு வாழ வழி சொன்ன பண்டிதரே
நூற்றாண்டு நினைவுகளை நினைவேந்தி நிற்கின்றோம்
நூற்றாண்டு நினைவுகளை நினைவேந்தி நிற்கின்றோம்

(17986)

30.11.2023 அன்று நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் (245, கோவில் வீதி, நல்லூர்) பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெறும் எங்களது அன்புத் தந்தையாரின் நூறாவது ஆண்டு நினைவேந்தல் வணக்க நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

"ஊருணி நீர் நிறைந்து அற்றே உலகு அவாம் பேரறிவாளன் திரு"

தகவல்:குடும்பத்தினர்.


# இராசிபலன்

26.11.2023
கார்த்திகை 10, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 3.58 மணிவரை
பரணி பிற்பகல் 2.39 மணிவரை

சுபநேரம் -9.12-10.42 மணிவரை
இராகுகாலம்-4.42-6.12 மணிவரை
திருக்கார்த்திகை விரதம், குமாராலய தீபம், சர்வாலய தீபம்

சந்திராஷ்டமம்- அத்தம், சித்திரை.

வளவன்



மேஷம்

கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள்.



கடகம்

திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.



துலாம்

களஸ்திர நன்மையுண்டு, சுற்றத்தார் வருகையால் சுகம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.



மகரம்

நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வாகன சுகமுண்டு, வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு.



ரிஷபம்

ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், சயன சுகக் குறைவு ஏற்படலாம்.



சிம்மம்

உறவினர் பகை மாறும், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, உடல் நலன் சீராகும்.



விருச்சிகம்

சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், இல்லத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழும் நாள், தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.



கும்பம்

சமூதாயப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சுதந்திரமாகச் செயற்படும் நாள், உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.



மிதுனம்

பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், தொலைபேசித் தகவல்களால் உற்சாகமடைவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.



கன்னி

மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



தனுசு

பொன்னான எதிர்காலம் அமைய புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.



மீனம்

மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

பெண்களுக்கு மௌனத்தைப் போன்ற அணிகலன் வேறில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர்களாகப் பதவி உயர்வு





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

விஞ்ஞான பீடத்தின் தாவரவியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஈ.சி.ஜெயசீலன், கணிதவியலும் புள்ளிவிபரவியலும் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.கண்ணன், கலைப் பீடத்தின் கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) ஜெ.இராசநாயகம் ஆகியோரைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக் கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியது.

இதன் அடிப்படையில் மூவரும் பேராசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (நி-5)

# மாவீரர் தினத்தை முன்னிட்டு கொடிகளால் அலங்கரிப்பு




(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு நகர்ப்பகுதிகள் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரை தியாகம் செய்த போராளிகளை நினைவுகூரும் மாவீரர் வாரம் தற்போது அனுஷ்டிக்கப்பட்டு வருவதுடன் மாவீரர் நாள் நவம்பர் 27 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டி பல முக்கிய பகுதிகளில் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. (நி-5-33)

# புலமைப்பரிசில் பரீட்சை- 2023 சித்தியடைந்தோர் விபரம்

**யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்**

து.சந்தோஷ்-184,கி.ரிதுபன்-160,ச.தபிஷன்-159, ர.பர்மிஜா-158,ரா.சனோஜா-157,பா.ஹரிணிஹிந்துஜா-157,சு.சியானி-157,பு.நிறோஜி-154,வி.ஆருஜன்-151,மே.பவிதாரன்-149,சு.மதுஷன்-148, ஜே.கவிப்பிரியன்-147, சு.ஜசிந்-146.

**யா/ஏழாலை தெற்கு அ.மி.த.க பாடசாலை**

உ.தருணிக்சா-154,சு.டன்சிகா-153.

**யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்**

சு.ஜசோன்-151.

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் நடத்தப்படும் டிப்ளோமா தரச் சான்றிதழ் கற்கை நெறிக்கு பயிலுநர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சி நெறியை தொடர விரும்பும் யாழ். பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட 18-35 வயதினையுடையோர் யாழ்ப்பாண பிரதேச செய லகத்துடன் தொடர்பு கொண்டு 10.12.2023 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாண பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (நி-5)

# திருவாசக கட்டுரைப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் துறையும், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையும் இணைந்து நடத்தும் திருவாசக கட்டுரைப்போட்டி டிசம்பர் 25 அன்று இடம்பெறவுள்ள மார்கழி பெருவிழாவினை முன்னிட்டு மாணவர்களிடையே சைவ சமய அறிவாற்றலை மேம்படுத்தும் நோக்குடன் சிவத்தமிழ் வித் தகர் சிவமகாலிங்கம் ஐயா நினைவாக நடத்தப்படவுள்ளது.

தரம் 9 தொடக்கம் 13 வரையான மாணவர்கள் "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" எனும் தலைப்பில் 700 சொற்களிலும் பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி நிறுவன மாணவர்கள் "மன்னுமாமலை மகேந்திர மதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்" எனும் தலைப்பில் 1000 சொற்களிலும் கட்டுரை எழுதி அனுப்ப வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் அதிபர் ஊடாக தமது சுய ஆக்கம் என்பதை உறுதிப்படுத்துவதுடன், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வித்துறை மாணவர்கள் தமது கல்வி நிறுவன அடையாள அட்டை பிரதியினை இணைத்து அனுப்ப வேண்டும்.

கட்டுரைகள் டிசெம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

போட்டி தொடர்பிலான மேலதிக விபரங்களை 070 770 1111 இலக்கம் ஊடாக தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (நி-5)

# தாவராவதானி போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு இயற்கையை நேசிக்கக் கற்றுத் தரும் தாவரங்களை அடையாளம் காணும் தாவராவதானி போட்டியானது இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் கிட்டுப் பூங்கா கார்த்திகை வாசம் மலர்க்கண்காட்சி இடம் பெறும் இடத்தில் நடைபெறவுள்ளது.

வயது, பால் வேறுபாடின்றி எவரும் இப் போட்டியில் பங்குபற்றலாம் எனவும் மேலதிக தகவல்களுக்கு 077 796 9644 எனும் தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-5)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்லும்

தோற்றம் 12 - 02 - 1946



மறைவு 28 - 10 - 2023

கடந்த (28.10.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

**திரு. நாகலிங்கம் கணேசு**

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

**அவர்களின் மறைவுத் துயரில் பங்கெடுத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பி ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் நாளை (27.11.2023) திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.**

(தயவுசெய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.) (சி-7725)

முதலியார்,கனகசபை வீதி,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கு உணர்வுபூர்வம் அங்கு பயங்கரவாதம்

33

**வடக்கு - கிழக்கில் உணர்வுபூர்வமான விடயம் தெற்கில் பயங்கரவாதமாகப் பார்க்கப்படுகிறது. தெற்கில் உணர்வுபூர்வமான செயற்பாடு தமிழ் மக்கள் மனங்களை காயப்படுத்தும் வகையில் அமைகிறது.**

உலக வரலாறுகளில் அகிம்சை எனும் பெயரை தன்னகத்தே கொண்டு அகிம்சையின் தந்தை எனப்பேற்றப்படுபவர் மகாத்மா காந்தி அடிகள்.

இந்திய நாட்டின் தேச விடுதலைக்காக கத்தியின்றி, இரத்தமின்றி, யுத்தமின்றி வெள்ளையர்களிடம் இருந்து இந்தியாவிற்கு சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தவர் மகாத்மா காந்தி.



அவர் இந்தியாவுக்கு அவ்வளவு சுலபமாக சுதந்திரத்தைப் பெற்றுத்தரவில்லை.

அந்த சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள அவர் பல துன்பங்களையும் எண்ணுக் கணக்கின்றிய அவமானங்களையும் பெற்றார்.

ஆயினும் அவர் சோர்ந்து போகவில்லை. தன் தேச விடுதலைக்காக அறவழியிலான தனது போராட்டத்தை ஓயாமல் முன்னெடுத்தார்.

மகாத்மா காந்தியை பிரிட்டிஸ் அரசும் அரச படைகளும் சற்றும் மதிக்கவில்லை. அவரை எப்படியாவது அடக்கிவிட முயற்சித்தனர். ஆனால் மகாத்மா காந்தி அதற்கு அடிபணியவில்லை.

அதன் பலன் இந்திய நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தது. அந்த சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள அவர் எண்ணக்கணக்கின்றிய சிறைவாசத்தையும் சித்திரவதையையும் அனுபவித்திருந்தார்.

இந்திய தேசத்திற்கு அறவழிப் போரின் மூலம் சுதந்திரத்தைப் பெற்றுத்தந்த காந்தியடிகளின் புகழ் உலகெங்கும் பரவியது.

தமது காலடியில் போட்டு சப்பாத்தினால் மிதித்த மகாத்மா காந்திக்கு மதிப்பளிக்க வேண்டிய சூழ்நிலை பிரிட்டிஸ் அரசுக்கு ஏற்பட்டது.

1931 ஆம் ஆண்டு அவரை இங்கிலாந்தின் பாராளுமன்றத்திற்கு அழைத்த பிரிட்டிஸ் அரசு அவரை அங்கு கௌரவித்து மதிப்பளித்தது.

2015 ஆம் ஆண்டு பிரிட்டிஸ் பாராளுமன்ற வளாகத்தில் அப்போதைய பிரிட்டிஸ் பிரதமர் டேவிற் கம்ருன் தலைமையில் மகாத்மா காந்திக்கு ஒன்பது அடி உயர சிலையை நிறுவினர்.

எவரை அடிமைப்படுத்த நினைத்தனரோ அவர் சிலையாய் பிரிட்டிஸ் பாராளுமன்றில் உயர்ந்து நிற்கிறார்.

இது கார்த்திகை மாதம். மாவீரர் வாரம். இலங்கையில் இனங்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டினால் எழுந்த ஆயுதப் போரில் உயிர் நீத்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை நினைவுகூரும் காலம்.

2009 இற்கு முற்பட்ட காலத்தில் தமிழர் தாயகம் எங்கும் இக்காலத்தில் ஒரு வித சோக இளை ஓடும்.

ஆம், தமிழர் பிரதேசத்தில் அநேகம் ஒரு வீட்டில் ஒரு மாவீரர் ஆவது இருப்பர்.

அந்தளவிற்கு தேசப்பற்றுடன் வாழ்ந்து தம்தேசத்திற்காக தம் உயிரையே ஈகம் செய்தவர்களை நினைவுகூர தமிழ் தேசமே எழுச்சி பெறும்.

இறந்த தனது மகனை, சகோதரனை, சகோதரியை, உறவுகளை நினைவேந்தும் உரிமை அனைவருக்கும் உண்டு.

அதைத் தடுத்தால் அது பெரும் மனித உரிமை மீறல்.

இறந்து போன தமது உறவுகளை நினைவு கூரும் உரிமையைக்கூட தர மறுப்பவர்கள் தமிழருக்கு எப்படி நீதியான தீர்வைத் தருவார்கள். நிலையான சமாதானத்தைத் தருவார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

2009 ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு பயங்கரவாதம் அழிக்கப்பட்டதாய் அரசாங்கம் அறிவித்திருந்தாலும் இன்று வரை தமிழினத்துக்கான தீர்வு என்பது எட்டாக் கனியே.

நாட்டில் இறந்த இலங்கை இராணுவத்தினரை நினைவுகூர உரிமையுண்டு. வெற்றி விழா கொண்டாட அதிகாரம் உண்டு.

ஆனால் மண் மீட்புக்காய் மரணித்துப் போன தமது உறவுகளை நினைவுகூரத் தடை விதிப்பதென்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல.

இனங்களுக்கிடையில் எழுந்த போரில் மடிந்து போனது பல்லாயிரக்கணக்கான தமிழ், சிங்கள இளைஞர்களே.

இங்கு தான் பிரச்சினை எழுகிறது. தமிழர் தாயகத்தில் உணர்வுபூர்வமான ஒரு விடயம் தெற்கில் பயங்கரவாதமாகப் பார்க்கப்படுகிறது.

தெற்கில் உணர்வுபூர்வமாக கொண்டாடப்படும் விடயம் தமிழ்மக்களின் மனங்களை காயப்படுத்தும் வகையில் இருக்கின்றது.

மாவீரர் நாள் நினைவுகூரலையும், விடுதலைப் புலிகளை அழித்த வெற்றி விழா நாளையும் இதற்கு உதாரணமாகக் கூறிவிடமுடியும்.

எங்கு சரி, எதில் பிழை என்பதை தவிர்த்து ஒரு விடயம் நடந்து முடிந்துவிட்டது. அதனால் இந்த நாடே மீள முடியாத நிலையில் இருக்கிறது.

இனியும் நாம் மீண்டும் மீண்டும் இன-மத வன்மத்தை தூண்டும் செயலில் ஈடுபடுவோமாக இருந்தால் இலங்கை இனி ஒரு போதும் மீளமுடியாத ஆழ் நிலைக்குச் சென்றுவிடும்.

இங்கு பயங்கரவாதத்தைத் தூண்டும் செயல் என்பது எது என்பதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும்.

இறந்து போன தனது மகனை ஒரு தாய் நினைவுகூருவது பயங்கரவாதத்தை தூண்டும் செயல் என்பதற்குள் இருக்கும் முரணை பிரித்துப் பார்க்கவேண்டியவர்கள் தெற்கு அரச தரப்பினரே.

மகாத்மா காந்தியையும் அவரின் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளாத பிரிட்டிஸ் அரசு அவருக்கு பிரிட்டிஸ் பாராளுமன்றிலேயே சிலை வைக்கும் அளவில் மனமாற்றத்தை ஏற்படுத்தியதற்குள் இருக்கும் நியாயத்தன்மையை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

மண் மீட்புப் போரில் இறந்து போன தமது பிள்ளைகளுக்கு சிலை வைக்க அனுமதி கேட்கவில்லை. நினைவு கூரும் உரிமையினையே கேட்கிறார்கள் ஈழத்து தாய்மார்கள்.

அதை விட்டுக்கொடுப்பதில் பேரினவாத அரசுகளின் மனம் மாற வேண்டும். இதுவே இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். வண்ணை கலைவாணர் நாடக மன்றத்தின் அமைப்பாளரும் சிறந்த நாடகக் கலைஞருமான பற்குணம் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் இராசையா பீதாம்பரம் அவர்கள் தனது 92 ஆவது வயதில் காலமானார்.

அவரின் மறைவு நாடகத்துறைக்கு மிகுந்த இழப்பு. அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** வட்டுக்கோட்டை பொலிஸாரால் சித்திரவதைக்கு ஆளாகி உயிரிழந்த சித்தங்கேணி இளைஞரின்ர சம்பவத்தில சம்பந்தப்பட்ட பொலிஸாரைக் கைது செய்யுமாறு யாழ்ப்பாண நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்குது.

உண்மையில பொலிஸ் திணைக்களம் எந்தளவுக்கு நேர்மையாக, நீதியாகச் செயற்படுகிறதோ அப்பதான் இந்த நாட்டில சட்டம், நீதி பாதுகாக்கப்படுவதுடன் இலஞ்ச ஊழல்களும் கொலை, களவுகளும் முற்றாகத் தடுக்கப்படும்.

ஆனால் எங்கட நாட்டில பொலிஸ் திணைக்களத்தில தான் ஊழல் தலை விரித்தாடுது.

உதாரணத்திற்கு போக்குவரத்துப் பொலிஸார் ஒரு நாளில பொது மக்களிட்டப் பெற்றுக் கொள்கின்ற இலஞ்சம் இலட்சக்கணக்கான ரூபாய் என முறைசாராத ஆய்வொன்றில தெரியவந்திருக்குது.

சட்ட விதிமுறைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில பொலிஸார் வாகனப் பரிசோதனைகளை நடத்துபவர்களாக இருந்தால், வீதி விபத்துக்கள் கணிசமாகக் குறைந்திருக்க வேணும்.

ஆனால் இஞ்ச ஒவ்வொருநாளும் விபத்து மரணம் நடந்து கொண்டே இருக்குது.

வாகன சாரதிகளில் பெரும்பாலானவர்கள் வீதி விதிகளைப் பின்பற்றுவதில்லை.

கையடக்கத் தொலைபேசியில் உரையாடிய படியே வாகனங்களை ஓட்டுகினம்.

இதற்குக் காரணம் பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுத்துத் தப்பித்துக் கொள்ளலாம் என்பது தான்.

இவ்வாறு விதானையார் விசுவலிங்கம் நீண்ட கருத்தை மூச்சு வாங்காமல் முன்வைத்தார்.

விதானையாரின் கருத்தோடு ஆலடியில் சில நிமிடம் நிசப்தம் நிலவியது.

நிசப்தத்தைக் கலைக்க, கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணியார்-** விதானையார் சொல்லுறது உண்மை தான். அதேநேரம் தங்கட கடமையை நேர்மையாகச் செய்ய வேண்டும் என்பதில உறுதியாக இருக்கின்ற பொலிஸ் உத்தியோகத் தர்களும் இருக்கினம்.


கடந்த 23 ஆம் திகதி யா-எல பகுதியில் சந்தேக நபரைக் கைது செய்யும் முயற்சியில் ஈடுபட்ட போது, சாவகச்சேரியைச் சேர்ந்த ஒரு தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஆற்றில மூழ்கி உயிரி ழந்து போன சம்பவம் நடந்தது.

தங்கட கடமையைச் சரியாகச் செய்ய வேணும் என்பதற்காக உயிரையும் துச்சமாக மதித்து கடமையாற்றுகின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களும் இருக்கினம். அவர்களுக்கு நாங்கள் தலைவணங்குகிறம்.

**மூப்பர்:-** தமிழகத்தில கடமையின் போது பொலிஸார் உயிரிழந்தால், அவர்களுக்கு இலட்சக் கணக்கான ரூபாவை நிவாரணமாக தமிழக அரசாங்கம் உடனடியாக அறிவிக்கும்.

ஆனால் இஞ்ச சந்தேக நபரைப் பிடிக்கச் சென்ற போது ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்த சம்பவம் கூட அரசாங்கத்தினருக்குத் தெரியுமோ தெரியல்ல.

இவ்வாறு மூப்பர் கூறும் போது, வாத்தியார் வைத்திலிங்கம் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தார்.



## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் எங்கள் பெரும் கல்விச் சொத்து

இதனை அவதானித்த சாத்திரியார் சதாசிவம் என்ன வாத்தியார் கடும் யோசனையில் இருக்கிறியள் என வினவினார்.

**வாத்தியார்:-** தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் பாடசாலை மாணவர்களுக்கு நடத்துகிற பரீட்சையை நிப்பாட்டி வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் பரீட்சை நடத்துறதுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக அறிந்தன்.

உண்மையில் தொண்டைமானாறு வெளிக் கள நிலையம் நடத்துகிற பரீட்சை என்பது காத்திரமானது. அதனால தான் வட மாகாணம் என்ற எல்லை தாண்டி நாடு பூராகவும் உள்ள தமிழ் மாணவர்கள் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடத்துகின்ற பரீட்சைக்குத் தோற்றுகினம்.

1967 ஆம் ஆண்டு தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் இந்தப் பரீட்சைகளை ஆரம்பத்திருக்குது. 56 ஆண்டுகள் நின்று நிலைத்திருக்குது எண்டால் அதில எங்கட தமிழ்க் கல்வியாளர்கள் ஆற்றிய அரும்பணி எத்துணை என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

ஆகையால வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடத்துகின்ற பரீட்சையை ஊக்குவிக்க வேணும்.பரீட்சை நடத்திறதில சில குறைபாடுகள் இருந்தால் அது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், தொண்டைமானாறு வெளிக்கள நிலைய நிர்வாகம் என்பன கூடியிருந்து கதைத்து அவற்றை நிவர்த்திக்க வேணும்.

இதை விட்டிட்டு ஒரு பெரும் கல்வி அமைப்பாக, 56 வருடங்களாகக் கட்டுக் கோப்புடன் இயங்குகின்ற, தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடத்துகின்ற பரீட்சை என்றால் அதற்கு நாடளாவிய ரீதியில் கனதியான மதிப்பு உண்டு.

எனவே அந்த அமைப்பை நாங்களே தட்டிவிட்டதாக இருக்கக் கூடாது.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனை ஆலடியில ஒரு தீர்மானமாக நிறைவேற்றுவம் என்று சிறாப்பர் கனகசபை கூற, தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## “ தகுதியற்ற எம்.பிக்களை பதவி நீக்கம் செய்யும் சட்டம் கொண்டு வரப்பட்டால் எங்கள் தமிழ் எம்.பிகளின் நிலை?

கணேஸ்-பருத்தித்துறை

### சுதன்-குப்பிழான்

**போர்க்குற்றத்தை ஏற்கமறுக்கும் பேரினவாதம் பொருளாதாரத்தை ஏற்குமா?**

போர்க்குற்ற மீறல்களினால் பாதிக்கப்பட்டது தமிழினம் மாத்திரமே. ஆதலால் அது பெரும்பான்மையினருக்கு பெரிய விடயமே இல்லை. போர்க்குற்ற மீறல்களில் ஈடுபட்டவர்கள் எங்கள் பிள்ளைகள். எங்கள் பிள்ளைகளை எப்படி காட்டிக்கொடுக்க முடியும் என்பதும் அவர்களின் கூற்று.

ஆனால் பொருளாதார வீழ்ச்சி தமிழினத்தை மட்டுமல்ல சிங்கள இனத்தை பெரிதும் பாதித்திருக்கிறது.

அன்றாடம் உழைத்து அன்றே உண்டு குடித்து மகிழும் அவர்களின் கலாசாரம். மறுநாள் உழைப்பை அது பாதிக்குமாக இருந்தால் அவர்களால் சமாளிக்க முடியாது.

அதை அவர்கள் ஏற்கவும் மாட்டார்கள். போர்க்குற்ற மீறல்களை விட பொருளாதார நெருக்கடி அவர்களுக்கு பெரிய விடயமே.

### விஜயதரன்-உரும்பிராய்

**மாவீரர் நாள் தொடங்குவதும் அதற்கு பாதுகாப்பு தரப்பு தடைவிதிக்க ஓடித் திரிவதும் வழமை ஆகிவிட்டதே?**

மாவீரர்கள் ஒன்றும் வேற்றுக் கிரகவாசிகள் அல்லவே. இந்த பூமியில் தமிழ் தாய்க்குப் பிறந்த மைந்தர்களே.

அவன் தன் இனத்தின், மண்ணின் விடிவுக்காக போரிடத் தலைப்பட்டான். தன் உயிரையே அதற்கு மாற்றீடாய்க கொடுத்தான்.

அவனை அவனது உறவுகள் நினைவுகூர முடியாது என்றால் இன நல்லிணக்கம் இந்த நாட்டில் இருக்கிறதா என்று தானே கேட்க வேண்டும். இந்த அடக்குமுறைகளே நாட்டில் ஆயுதப்போர் உருவாகக் காரணமாக வும் இருந்தது என்பதை பேரினவாதம் புரிந்து கொள்கிறதே இல்லை.

### திகான்-வடமராட்சி

**உடல், உள வலிமை மிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்கும் திட்டம் எம்மிடத்தே இருக்கிறதா வியாசரே?**

ஒரு நாளும் இல்லை. ஆனால் முன்னொரு காலத்தில் உடல், உள வலிமை மிக்க துணிந்த ஒரு இளம் சமூகம் மலைபோல் குவிந்திருந்தது. எம் இனத்துக்காக, எம் மண்ணை மீட்பதற்காக, எமது வளங்களைக் காப்பதற்காக, எம்மை நாமே ஆள்வதற்காக இனப்பற்றுடன், மண்பற்றுடன் உறுதியாக இருந்த சமூகம் முன்னொரு காலத்தில் இருந்தது.

அவர்களிடம் ஒழுக்கம் நூறுவீதம் இருந்தது. ஆனால் இன்றைய நிலை அப்படியில்லை. யோகிபாபு தலைவெட்டு அதையும் இழுத்து இழுத்து மேலே விட்டுக்கொண்டு, சேட்பட்டனைக் கழற்றி விட்டுவிட்டு எதற்காக என்றே தெரியாமல் வேகமாக மோட்டார் சைக்கிளை ஓடிக்கொண்டு சிறு பிரச்சினைக்கே கழுத்தில் கயிற்றை மாட்டும் சமூகம் இப்போதைய சமூகம்.

### சுதாகரன்-தொட்டிலடி

**க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கு ஏதும் கூறமுடியுமா?**

மாணவனே நீ உன்னை அறிந்துகொள். மனதை ஒரு நிலைப்படுத்து. உன்னைப் படிக்க வைப்பதற்கு உன் பெற்றோர் படும்பாட்டை கொஞ்சம் சிந்தித்துப் பார்.

நீ இப்போது நிற்கும் இடம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த தடை தாண்டலில் உன் தடையை நீ தாண்டிவிட்டாயாக இருந்தால் உன் வாழ்க்கை பிரகாசிக்கும். உன்னால் உன் பெற்றோர் மகிழ்வர். உன்னால் உன் ஊரவர் மகிழ்வர். உன்னால் உன் தேசத்தவர் மகிழ்வர்.

நீ உயர்ந்த மனிதனாய் ஓங்கி நிற்பாய். இதுவே உண்மை.

### தர்மன்-யாழ்ப்பாணம்

**பில்லியன் அமெரிக்க டொலரினை விளையாட்டுத் துறைக்கா? விவசாயத்துக்கா? மீன்பிடித்துறைக்கா? பயன்படுத்துவது சிறந்தது?**

இவை மூன்றும் நாடு முன்னேற துணைநிற்கும் துறைகள். ஆதலால் இவை மூன்றிற்கும் பகிர்ந்தளித்தால் முறையானது.

ஆனால் அந்த மணியை மூன்று பூனைகளுக்கும் கட்டி விடுவது யார் என்பதில் தானே பிரச்சினை இருக்கிறது.

### கணேஸ்-பருத்தித்துறை

**தகுதியற்ற எம்.பிக்களை பதவி நீக்கம் செய்யும் சட்டம் கொண்டுவரப்பட்டால் எங்கள் தமிழ் எம்.பிகளின் நிலை?**

மக்களுக்காக, மக்கள் சேவைக்காக பாராளுமன்றம் சென்றவர்கள் மக்கள் வாழும் மண்ணில் இருக்கும் நேரத்தை விட தெற்கில் சுகபோக வாழ்க்கை வாழும் நேரமே அதிகம்.

பாராளுமன்ற அமர்வுகள் நடக்கும். அவர்கள் பிரசன்னமாகுவார்கள். அதன் நிலை எப்படியென்றால், படிக்கத் தெரியாத மாணவன் கடைசி வாங்கில் முழுசிக் கொண்டு இருப்பதுபோல அங்கே கதிரைகளுக்குள் மறைந்து இருந்துவிட்டு வருவதே இவர்களின் அன்றாட கடமையாகும்.

ஆனால் வருடா வருடம் வாகன பேமிட் வாங்குவதற்கும் வேலை செய்கிறார்களோ இல்லையோ என்பது பாராமல் பிரத்தியேக செயலாளர்களை நியமித்து பேமன் எடுப்பதற்கும் இன்னும் இதர சேவைகளுக்கும் இவர்கள் பின் நிற்பதே இல்லை.

### சுரேசன்-பத்தமேனி

**கடலில் சேரும் மழைநீரை மக்கள் பாவனை நீராக மாற்றும் திட்டம் இருக்கிறதா?**

மண்ணைக் கொட்டி வீதிகளை உயர்த்தி காப்பற் அடிக்கத் தெரிந்தவர்களுக்கு மழைநீரை வழிந்தோட வைக்கும் அறிவு எழவில்லையே.

சல்லியைக் கொட்டி ரயில் பாதை அமைத்தவர்களுக்கு வெள்ளம் எப்படி ஓடும் என்ற எண்ணம் வரவில்லையே.

வடிகாலமைப்பு என்பது மிக முக்கியமானது. அது அடிப்படையானதும்.

அதை சரியாக செய்யாதவர்களிடம் மழைநீரைத் தேக்கும் திட்டம் எப்படி எழும்.

ஓ... வீட்டு முற்றத்தில் தேங்கி நிற்கும் நீர்தான் மழைநீர் திட்டமோ?

எமது அதிகாரிகளின் அறிவும் அனுபவமும் அவ்வளவு தான்.



அன்பு வாசகர்களே! உங்கள் எண்[illegible] 097 3126 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

**திரைப்படம்: உரிமைக்குரல்**
**இயற்றியவர்: கண்ணதாசன்**
**இசை: மெல்லிசை மன்னர்**
**பாடியவர்: கே.ஜே.யேசுதாஸ்**



தீபம் எரிகின்றது ஜோதி தெரிகின்றது
காலம் மலர்கின்றது கனவு பலிக்கின்றது
எண்ணத்தில் என்னென்ன
தோற்றம் – என்
நெஞ்சத்தில் நீ தந்த மாற்றம்
உனக்காகவே நான் வாழ்கிறேன்

விழியே கதை எழுது கண்ணீரில் எழுதாதே
மஞ்சள் வானம் தென்றல் சாட்சி
உனக்காகவே நான் வாழ்கிறேன்

விழியே கதை எழுது கண்ணீரில் எழுதாதே
மஞ்சள் வானம் தென்றல் சாட்சி
உனக்காகவே நான் வாழ்கிறேன்

மனதில் வடித்து வைத்த சிலைகள்– அதில்
மயக்கம் பிறக்க வைத்த கலைகள்
மேகங்கள் போல் நெஞ்சில் ஓடும்
வானத்தை யார் மூடக்கூடும்
உனக்காகவே நான் வாழ்கிறேன்

விழியே கதை எழுது கண்ணீரில் எழுதாதே
மஞ்சள் வானம் தென்றல் சாட்சி..

கோவில் பெண் கொண்டது
தெய்வம் கண் தந்தது
பூஜை யார் செய்வது – இந்தப்
பூவை யார் கொள்வது
ஊமைக்கு வேறேது பாஷை?
உள்ளத்தில் ஏதேதோ ஆசை
உனக்காகவே நான் வாழ்கிறேன்

விழியே கதை எழுது கண்ணீரில் எழுதாதே
மஞ்சள் வானம் தென்றல் சாட்சி...

தீபம் எரிகின்றது ஜோதி தெரிகின்றது
காலம் மலர்கின்றது கனவு பலிக்கின்றது
எண்ணத்தில் என்னென்ன தோற்றம் – என்
நெஞ்சத்தில் நீ தந்த மாற்றம்
உனக்காகவே நான் வாழ்கிறேன்

விழியே கதை எழுது கண்ணீரில் எழுதாதே
மஞ்சள் வானம் தென்றல் சாட்சி..

# எங்கே தவறிழைத்தது இந்திய அணி?

நீங்கள் அவுஸ்திரேலியாவைக் குறைத்து மதிப்பிடவே முடியாது. அவர்கள் வெறும் பங்கேற்பாளர்களாக மட்டும் இருக்கமாட்டார்கள். இயன்றவரை துணிவோடு போராடி கடைசிவரை சவாலளிப்பார்கள். உலகக்கோப்பையின் இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய சமயத்தில் வர்ணனையில் ரவி சாஸ்திரி இப்படிப் பேசியிருந்தார்.

அந்த வார்த்தைகள் எவ்வளவு உண்மை என்பதை உலகக்கோப்பைக் கனவில் மூழ்கியிருந்த அத்தனை ரசிகர்களும் உணர்ந்து விட்டனர். அவுஸ்திரேலிய கப்டன் பேட் கம்மின்ஸ் சொன்னதைச் செய்து விட்டார். அகமதாபாத்தில் கூடியிருந்த ரசிகர்களை மட்டுமல்ல, இந்தியா முழுக்க ஆர்வத்தோடு கூடியிருந்த அத்தனை ரசிகர்களையும் அமைதிப்படுத்திவிட்டார்.

காரணம், இந்த முறை இந்திய அணி ஆடிய விதம். எந்த அணியாலும் வீழ்த்தவே முடியாத அணியாக இருந்தது. வீரர்கள் அனைவரும் நல்ல ஃபார்மில் இருந்தார்கள். 10 போட்டிகளில் தொடர்ச்சியாக வென்று இறுதிப்போட்டிக்கு வந்திருந்தார்கள். உலகக் கோப்பையில் இப்படித் தொடர் வெற்றிகளைக் குவித்த இந்திய அணியை ரசிகர்கள் இதுவரை பார்த்ததே இல்லை.

ஆனால், ஒன்றரை மாதமாக இந்திய அணிக்கு எவையெல்லாம் சரியாக நடந்திருந்தனவோ, அவையெல்லாம் இறுதிப்போட்டியில் தவறாக நடந்தன. மூச்சைப் பிடித்து இறுதிவரைக்கும் முன்னணியிலேயே இருந்து வேகமாக ஓடி வந்த அணியால், நெஞ்சை நிமிர்த்தி அந்த இறுதிக்கோட்டைத் தாண்ட முடியவில்லை.

நமக்குத் தேவை உலகக் கோப்பை. அது நம்மைத் தேடி வரும் என நம்மால் காத்திருக்க முடியாது. துணிச்சலோடு போராடி முட்டி மோதுவோம். இந்தியாவுக்கும் தென்னாபிரிக்காவுக்கும் எதிராக முதல் இரண்டு போட்டிகளைத் தோற்றபோது தன் சகவீரர்களுக்கு ஆஸி கப்டன் பேட் கம்மின்ஸ் இப்படித்தான் மெசேஜ் சொன்னார். அதன்பின்னர் ஆஸி வெகுண்டெழுந்து எந்தப் போட்டியையும் தோற்காமல், நாக் அவுட்டில் அதே தென்னாபிரிக்காவையும் இந்தியாவையும் வீழ்த்தி உலகக்கோப்பையை வென்றிருக்கிறது. அவுஸ்திரேலியாவின் தொடக்க நிலையில் இந்தியா இருந்திருந்தால், கம்மின்ஸிடமிருந்து வெளிப்பட்ட அந்தத் துணிச்சல் மெசேஜ் ரோகித்திடமிருந்து வெளிப்பட்டிருக்குமா என்பதே சந்தேகம்தான். முக்கியமான கட்டங்களில் 'இழப்பதற்கு எதுவும் இல்லை' என்கிற மனப்பாங்கில் இறங்கி அடிக்க வேண்டும். தயக்கங்களை ஒதுக்கி வைத்து விட்டு துணிச்சலாகப் போராடிப் பார்க்க வேண்டும். அந்த மனப்பாங்கு இந்திய அணியிடம் இல்லை.

ஃபைனலில் முதல் 10 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணிக்கு 3 விக்கெட்டுகள் காலி. இந்தியாவுக்கும் அதே 3 விக்கெட்டுகள்தான் பவர்ப்ளேயில் விழுந்திருந்தன. ஆனால், அந்த வீழ்ச்சியிலிருந்து ஹெட்டாலும் லபுஷேனாலும் அணியை மீட்க முடிந்தது. அவர்கள் செய்த அதே காரியத்தை கோலியாலும் ராகுலாலும் இந்திய அணிக்குச் செய்ய முடியவில்லையே. இத்தனைக்கும் கோலி, ராகுலின் ஃபார்மை ஒப்பிடுகையில் ஹெட், லபுஷேன் எல்லாம் ஒன்றுமே இல்லை. ஆனால், அவர்களிடமிருந்த மனத்திடமும் துணிச்சலும் நம் ஆட்களிடம் இல்லை.

இழக்கும் ஒரே ஒரு விக்கெட் இவர்களுக்கு 10 ஓவர்களுக்கு மேல் பவுண்டரியே இல்லாமல் செய்துவிடுகிறது. இருபது-20 யுகத்தில் இதெல்லாம் சகிக்கவே முடியாத சரண்டர். சூர்யகுமார் யாதவ் கடைசிக்கட்ட ஓவர்களில் டெய்ல் எண்டர்களுக்கு ஸ்ட்ரைக்கைக் கொடுத்துக் கொண்டிருந்தார்.



அக்ரஷன் என்பது 360 டிகிரியில் ஷாட் ஆடுவதில் மட்டுமே இல்லை என்பதற்கு இது ஆகச்சிறந்த உதாரணம்.

இந்திய அணி வேகமாக ஓடி எல்லைக் கோட்டை முதல் ஆளாக எட்டும் சாத்தியங்களைக் காட்டினால் மட்டும் போதாது. கொஞ்சம் ரிஸ்க் எடுத்து டைவ் அடிக்கவும் வேண்டும். நன்றாக ஆடியும் முக்கியமான கட்டத்தில் மிஸ் ஆகும் துணிச்சல்தான் இங்கே பிரச்சினை. கொஞ்சம் ரிஸ்க் எடுத்து டைவ் அடிக்கக் கத்துக்கோங்க டீம் இந்தியா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் நலம் பெற... வாழ்வு வளம் பெற...

இறைவனின் படைப்புகளில் மிக அற்புதமான படைப்பு மனிதன் ஆவான். சிந்திக்கும் இயல்பினால் மற்ற ஜீவராசிகளில் இருந்து மனிதன் முற்றிலும் வேறுபடுகிறான். இதனாலேயே மனிதனுக்கு உயர்திணை என்னும் அந்தஸ்து கொடுக்கப்படுகிறது.

"அரிது அரிது மானிடராதல் அரிது" என ஔவைப் பாட்டி அழகாக சொல்லியுள்ளார் இந்த மானிட வாழ்வு வளம்பெற எமது உடல்நலம் அவசியமானது ஆகும். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என பெரியோர்கள் கூறியுள்ளது நாம் உடல் நலனில் அக்கறை செலுத்தவேண்டும் என்பதற்காகத்தான்.

உடல் நலன் எனும் கூற்று இரு விடயங்களை உள்ளடக்கியுள்ளது. எமது புற அமைப்பான உடம்பு ஒன்று. அடுத்தது அக அமைப்பான மனம் ஆகும். இவை இரண்டும் ஒருசேரப் பேணப்படவேண்டும். உடம்பின் பாதுகாப்பிற்கும் உறுதிக்கும் பல்வகை உடல் பயிற்சிகள் உள்ளது போல



மனம் எனப்படும் அக அமைப்பைப் பேணுவதற்கு தியானமும் யோகாவும் உதவுகின்றன.

மனம் ஒரு குரங்கு என்பர். எவ்வாறு குரங்கு கொப்பிற்கு கொப்பு தாவுகிறதோ அதுபோல் மனமும் அலைபாய்ந்து கொண்டிருக்கும். இதன் கருத்து மனம் ஒருநிலையில் நிற்காமல் ஒரு குறிக்கப்பட்ட காலத்திலேயே பல நிலைகளை எடுக்கும். இதனால்தான் மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம் எனக் கூறுகிறார்கள்.

அலைபாயும் மனதிற்கு அணைபோட உதவுபவை தியானப் பயிற்சியும் யோகா பயிற்சியுமாகும். தியானப்பயிற்சி என்பது ஒரு குறிக்கோள், ஒரு சிந்தனை எனும் அடிப்படையில் மனதை அலைபாய விடாது ஒரு நிலைப்படுத்தலாகும். யோகா என்பது நிர்ணயிக்கப்பட்ட விதிகளுக்கு அமைய மூச்சு, ஆசன பயிற்சிகளில் ஈடுபடுதல் ஆகும். தினந்தோறும் நாம் மேற்கொள்ளும் சூரிய நமஸ்காரமும் ஒரு யோகாப் பயிற்சியே.

கற்கும் வயதினர் அல்லது கற்கும் செயற்பாட்டில் உள்ளவர்கள் அனைவருக்கும் இவ் தியான யோகபயிற்சிகள் அவசியமானவை ஆகும். மகாபாரதத்தில் பாண்டவர்களும் கௌரவர்களும் துரோணரிடம் குருகுலவாசம் செய்து பயின்றபோது நிகழ்ந்த ஒரு சம்பவம் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகக் காட்டப்படுகிறது.

பாண்டவர்கள் கௌரவர்களது குருகுலவாழ்க்கையில் ஒருநாள் துரோணர் அவர்களை அழைத்துக்கொண்டு வனம் ஒன்றினூடாக சென்றுகொண்டிருந்தார். ஒரு ஆலமரத்தின் அடியில் தன் சீடர்களுடன் தங்கிய துரோணர் சீடர்களைப் பார்த்து அதோ பாருங்கள். அந்த மரக்கிளையில் கிளி ஒன்று அமர்ந்திருக்கிறது தெரிகிறதா என்று கேட்டார்.

சீடர்களும் ஆம் என்று ஒருசேரக் கூறினார்கள். இப்பொழுது நீங்கள் ஒவ்வொருவராக வந்து கிளியின் கழுத்துக்கு இலக்கு வைத்து அம்பு எய்து கிளியின் கழுத்தை துண்டாக்க வேண்டும் என்றார். சீடர்களும் சரி என்று சொன்னார்கள்.

இதன் பின்பு துரோணர் சீடர்களை ஒவ்வொருவராக அழைத்து அம்பு எய்யத் தயாராகுமாறு கூறினார். அவர்கள் தயாரானபோது உங்களுக்க என்ன தெரிகிறது எனக்கேட்டார். ஒருவன் இலை தெரிகிறது என்றான். ஒருவன் கிளை தெரிகிறது என்றான். ஒருவன் கிளி தெரிகிறது என்றான். ஒருவன் ஆகாயம் தெரிகிறது என்றான். இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக் கூற அருச்சுணன் மட்டும் கிளியின் கழுத்து தெரிகிறது என்றான்.

துரோணர் ஒவ்வொருவராக அம்பு விடச் சொன்னபோது அருச்சுனன் விட்ட அம்பினால் கிளியின் கழுத்து துண்டாடப்பட்டது. அருச்சுனன் வெற்றியாளனாக அறிவிக்கப்பட்டான். இதற்குக் காரணம் அருச்சுனன் பெற்ற தியான யோகா பயிற்சியாகும். அவன் பெற்ற பயிற்சியினால் மனதை ஒருநிலைப்படுத்தும் ஆற்றல் உண்டாகியது.

சிக்காக்கோ நகரில் இராணுவச் சிப்பாய்கள் தங்களுக்கு இலக்காக வைக்கப்பட்ட முட்டையினை துப்பாக்கியால் சுட்டு உடைக்க முயன்று தோற்றபோது அதுவரை துப்பாக்கியே தொடாத சுவாமி விவேகானந்தர் துப்பாக்கியினால் சுட்டு முட்டையை உடைத்ததற்கு காரணமாக அவர் கூறியதும் அவரின் இந்த தியான யோகா பயிச்சிகளாகும்.

சுப்பிரமணியம் -யசீலன்
ஆசிரியர், யா/வல்வெட்டி இ.த.க.பாடசாலை

ஆற அமர இருந்து நூறு வயது வரை பேறாக வாழ்வித்த எமது மூதாதையர், கண்ணும் கருத்துமாய்க் கட்டிக்காத்து எமது மண்ணையும் விண்ணையும் அதிசயிக்க வைத்த எமது பொன்னான வாழ்வுக்கு, நாவூறு சேர்தாற்போலப் பாரியதும் பாரியதுமான சேறு வீசப்பட்டுள்ளது! பூசப்பட்டுள்ளது! சகதிகளில் கால் வைத்தவர்கள் அகதிகளாக்கப்படுகின்ற அவலம்! அம்பலமான வாழ்வு.

சேற்றினைக் கழுவுவதற்கு ஆற்றினை தேடி அலைகின்ற போது ஆறுகளும் வற்றி அவையுள்ளும் சேறுகளும் சகதிகளுமே நிரம்பியுள்ளன. அவற்றை வழித்து எடுத்துவிட்டால் ஆறுகள் வாழ்வாகும். சேறுகள் கழுவப்படும் சேறுகள் சேறாகிப் பேறாகும் போது செந்தாமரைகள் தெளிந்த நீரிலே குளிர்ந்து கொத்தாகிப் பூக்குமே.

ஒரு குடும்பத் தலைவனொருவனால் ஏமாற்றி கர்ப்பமாக்கப்பட்ட ஒரு படிக்கின்ற மாணவியின் சோகமே உருவாகிய கண்ணீர்க் கோலங்களே இயக்குநர் லிப்ஸிஜாவின் சேறு குறுந்திரைப்படம்.

மிகவும் கல்பிதமாக! காலத்தின் கண்ணாடியாக! இளைய தலைமுறையினரும் குறிப்பாக பதின்ம வயது மாணவர்களும், கட்டாயமாக பெற்றோர்களும், மற்றும் சமூகத்தின் ஒவ்வொருவரும் பார்த்து உணர வேண்டிய அதேவேளை, பிஞ்சில் பழுத்து அலை பேசியில் வாழ்வைத் தொலைக்கின்ற வாலிபம் சொட்டுவனப்புமிகு இளைஞர், யுவதிகளும் பாடம் படிக்கவேண்டியவர்கள் உள்ளத்தை

## சேற்றுக்குள் பூத்த செந்தாமரைகள்

அள்ளிக் கொண்ட, ஒரு சோகம் நிறைந்த ஆவலை வலிந்து தேடிய, முடிவில் அடிக்கத் துணிந்து ஏமாற்றிய காதலனுக்கு இரசிகர்களே அடிகொடுப் பதாக ஒப்பேற்றி வைத்துவிட்ட தரமான குறுந்திரைப்படம் சேறு.

இயற்கை வனப்பு மிகுந்த, அழகிய ஆனால் வறண்ட பாதைகள் வானம் பார்த்த பூமியாம் பழுத்த கற்பகப் பூமியிலே அதனோடியைந்த புராதன கிராமத்திலே படமாக்கப்பட்டுள்ளது. கூசாமல் பேசி, ஆசாரங்களை அறவே இல்லாதொழிக்கும் தொலைபேசிகளினாலும், எல்லை மீறி அனுபவிக்கும் போதைகளினாலும், இளமையை விருந்தாக்கும் தேவைகளினாலும், குடும்பங்களில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை கடந்த மேலதிக விருப்பங்களினாலும் கவரப்பட்ட பொறுப்பான ஒரு குடும்பத் தலைவனால் ஆசைகாட்டி கர்ப்பமாக்கப்பட்ட ஒரு பருவம் கொழிக்கும் மாணவியின் அவல நிலையை சித்தரிக்கும் கவலைதரும் காத்திரமான படைப்பாகும்.

சமூகமானது பாழ்பட்டு நிற்கும் இத் தருணம் எவரும் தப்பிவிட முடியாத பொறுப்பாளிகள் என்பதை இப் படம் உரத்துச் சொல்ல வைக்கிறது.

அண்மையில் நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் கலைஞர்கள் மத்தியில் "சேறு" படம் திரையிடப்பட்ட போது, சபையிலிருந்து எழுந்து வந்து கர்ப்பமாக்கிய நபரை அடித்த சம்பவம் தண்டனைக்கு வலுவூட்டியது.

ஆண்களும்சரி பெண்களும்சரி உங்கள் அழகினையும், அறிவினையும் ஆசையையும் அடக்கமாகப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். அட்டகாசமாக்காதீர்கள், விற்பனை செய்யாதீர்கள், விளக்கம் செய்யாதீர்கள், விளம்பரப்படுத்தாதீர்கள். தெய்வீகமாக்குங்கள் தேவர்களும் மனிதராக வரவேண்டும் மனிதர்களும் தேவர்களாக மிளிரவேண்டும். நாம் எம்மைக் கூர்மைப்படுத்துவோமாக இருந்தால், ஆபத்திலே நாம் அகப்பட்டே தீருவோம்.


சேறு திரைப்படம் ஒலி, ஒளி, இசை, கதை, வசனம், எழுத்து, நடிகர்கள், தயாரிப்பு, எல்லாமே மிகபிரம்மாதம். துணிவான, தோற்காத வெற்றிப்படைப்பு. இதை விட வேறென்ன எமக்கு வேண்டும். ஒவ்வொரு வீட்டிலிருந்தும் பிள்ளைகளிடத்தே பெற்றோர் விழிப்படைய வேண்டும். எச்சரிக்கையோடு மௌனமாக கண்காணித்து, நடை, உடை, பாவனை எல்லை மீறும் போது தலையிடுதல் நன்மைபயக்கும். இல்லாதபட்சத்தில் சேறுகள் வீட்டுக்குள்ளே வந்து வீடே சகதியாய்ப் போய்விடும்.

கலாபூசணம் கே.எஸ்.சிவஞானராஜா




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அமைதி வேண்டும்!



உலகெங்கும் போர்கள்
சிதைக்கப்படுகிறது நாடுகள்
சிந்தப்படுகிறது குருதி
பறிக்கப்படுகிறது உயிர்கள்
உடைக்கப்படுகிறது கட்டடங்கள்
முடக்கப்படுகிறது பொருளாதாரம்
அங்கலாய்க்கிறார் மக்கள்
அநாதைகளாகிறார் சிறுவர்கள்
உணவின்றி உறைவிடமின்றி
தெருவோரம் அகதிகளாய்
கண்ணீரே மிச்சமாகி
உடல்களை சுமந்தபடி
அன்பில்லை அமைதியில்லை
மனதுக்குள் சமாதானமில்லை
உடைக்கப்பட்ட சிறகுகளாய்
சிறகடிக்க முடியாமல்
ஏங்குகின்ற உலக மக்களுக்கு
நிரந்தரமான அமைதி வேண்டும்.

சி. இன்பராஜ்,
மந்துவில் மேற்கு.

## கல்வியின் மகிமை


கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பல்லவா
கற்றறியாதவனை சமூகம் மதிக்காதல்லவா
காற்றுள்ள போதே தூற்ற வேண்டும் முதுமொழியாகுமோ
இளையோரின் கல்வி சீரழிய கூடாதல்லவா?

போதைக்கு அடிமையாகும் கல்வி சமூகம்
கவனமாக செயற்படு அறிவை பயன்படுத்து
கண்டவர்களுடன் கதைத்துப் பழகாதே
ஆபத்தில் முடியும் தவறான பாதைகள்

ஒழுக்கமுள்ள சமூகம் உருவாக வேண்டுமே!
நாட்டில் தீயசக்திகளின் செயற்பாட்டால்
மாணவ சமூகம் அழிவுப் பாதையை - நாடுதே!
கல்வியை சீரழிக்க ஒரு கூட்டம் இருக்குதல்லவா!

இன்றைய சமூக புரழ்வுக்கு காரணம் யார் தெரியுமா?
போதை வியாபாரிகளின் சுயநல செயற்பாடல்லவா!
யாரைக் கண்டித்தும் எந்த நன்மையும் - இல்லையே!
எமது பாதையில் நாம் சரியாகப் பயணிப்போம்.

எஸ்.பி.தனா!
தெல்லிப்பழை



## பகிடியில்லை உண்மை!



கடந்த பாதை முடிந்து போக
நடந்த பாதை உயர்ந்து போக
தடியெடு படையெடு கொடியெடு என்று
முடிவது நடைமுறை புடிபடுமா?

கொலைவெறி கொண்டு
கொத்துக் கொத்தாய் கொன்று
பசிப்பிணி தீர்த்த பேய்களிடம்
பேரம் பேசி என்ன பயன்?

எடு முடி நட விடி என்று
சடைமுடி சாங்கரன் கூற்று
முடிவது ஒருநாள் அதன்முன்
முடித்திடு எதிரியின் கதையை

கடுகதி ரெயில்களின் ஓட்டம்
கடக்குமோ தண்டவாளம் தாண்டி
பிடரியில் ஒரு அடி போட்டால்
கால் அடிதனில் வீழ்வான் அன்றோ!

குண்டுகள் போட்டதன் குன்றினை
அழிக்கலாம்
எஞ்சிய எலும்பை கரி யாக்கலாம்
மிஞ்சிய இரும்பை பொடி யாக்கலாம்
மீளுமோ தமிழினம்என்று
விசும்புக்கதை பேசலாம்

வருவான் ஒருவன் அன்றே
அவனே தமிழின் தலைவன்
குலை நடுங்கிட கொலை செய்தவர்
பழி தீர்த்திட; பகிடி அல்ல உண்மை
இது பரமன் சொன்ன பெருமை!

இந்திரபுத்திரன்

## மௌனத்தின் தேடல்- 695



## விதியின் சதி

சின்னஞ்சிறு வயதினிலே
சிங்காரமாய் உடையணிந்து
சிறகடித்து பறக்க வேண்டிய சிறார்களே
சீர்கெட்ட இப்புவிதனிலே வந்துதித்ததனால்
பள்ளி செல்லும் பாலக பருவம்தனில்
புத்தகப்பைகளை சுமந்திட
வேண்டிய உயரிய தோள்களிலே
கோணிப்பைகளை தூக்கி
நெடுதூரம் நடைபோட்டிட யாரை குறை கூறுவது
மௌனமான கண்ணீர் துளிகளே பதில்.

ஆ .பாலமதுஜா,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

## மௌனத்தின் தேடல்- 690



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## பொதி சுமக்கும் பிள்ளை

புத்தகம் சுமக்க வேண்டிய
கைகள் - பொதி சுமக்கின்றன!
மண்ணா அரிசியா
தெரியவில்லை-ஆனால்
ஒரு வேளை உணவிற்கு
சிறகடிக்க வேண்டியவர்கள்
வலுவிழந்து நடக்கின்றனர்.

அருள்ராஜ் ,யாழ்ப்பாணம்.

## சாக்கடையின் சந்ததி

பணப் போதையில் மிதக்கும்
பண முதலைகள்
பணம் பெருக்கும் அவாவில்
சிறுவப் பருவத்தினரையும்
தகாத செயல்கள்
செய்ய வைத்து
செல்வந்தராய் சுகிக்க
சேவகம் செய்த சிறார்கள்
பாதை மாறிச் சீரழிகின்றனர்.

சி.இ.அன்புதுரை,
மானிப்பாய்.

## சுமையும் சுகமும்

தாயைப் போன்று கோவிலுமில்லை
தந்தை சொல் மிக்க மந்திரமுமில்லை
இதைப்பாலர் பாடம் போதித்ததால்
விதை போன்று பாசம் விருட்சமானது
அவர்களுக்காகச் சுமக்கும் சுமையும்
இவர்களுக்குச் சுகமாக தெரிகிறது
இந்த அன்புப் பரிமாற்றம் விரைந்து
சொந்தபந்தங்களைக் கடந்தால்
ஊருக்கு மட்டுமன்றிப் பரந்த
உலகும் மட்டில்லா மகிழ்வைப்பெறும்

க.நாகராசா, புணாவில்.

## காலத்தின் கொடுமை

தள்ளாத வயதினில்
முதுகில் மூட்டை
சுமக்கும்
தந்தையின்
வலிதன்னை
உணர்ந்து
தன்னால் இயன்றதை
தனயனும்
தோளில் சுமந்து
வீறுநடை போட்டு முந்திச்
செல்லும் விந்தையைப் பாரீர்!

ஆ.செல்வி ,திருநாவலூர்.

## பொறுப்பு

பள்ளிக்குச் சென்று பாடம் படித்து கவலையின்றி
துள்ளித் திரியும் சிறார்கள் தெருவில் கழிவுகள்
பொறுக்கி விற்றுப் பசியாறும் கொடுமை குடித்து விட்டு
தெருவில் கிடக்கும் பொறுப்பற்ற தந்தையால்
வந்த விளைவு தானோ?

சி.மகாலட்சுமி,கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்புறா




காலத்தின் பதிவு 85

"என் தந்தையின் செய்கையில் திருப்தியடைய வேண்டும்"

"என்ன செய்திருக்கிறார் உன் தந்தை?"

"நாம் இருவரும் நெருங்கி உட்கார்ந்திருப்பதை மறைந்திருந்து பார்த்திருக்கிறார்."

"ஆமாம்."

"பிறகு இரு கொள்ளைக்காரர்களை அழைத்து அவர்களுக்கும் நமது நிலையைக் காட்டியிருக்கிறார்."

"அதையும் கவனித்தேன்."

"அவர்கள் தங்கள் துணைவிகளை அழைத்துக் காட்டினார்கள்."

"ஆம் அதையும்தான் பார்த்தேன்."

"இதில் ஒன்றும் புரியவில்லையா உங்களுக்கு?"

"இல்லை புரியவில்லை."

மஞ்சளழகி அவன் தோளிலிருந்து தலையை நீக்கி அதன் விளைவாக நிமிர்ந்து அவன் முகத்தைத் தன் அழகிய விழிகளால் ஏறிட்டு நோக்கினாள். "உங்கள் அசட்டுத் தனத்தை என்ன சொல்லட்டும்!" என்று பரிதாபத்துடன் சொல்லவும் சொன்னாள்.

இளையபல்லவன் அந்தச் சமயத்தில் உண்மையாக அசட்டுப் பார்வையாகப் பார்த்தான். "என் அசட்டுத் தனமா?" என்று கேட்டான். குழப்பத்துடன்.

"ஆமாம்."

"என்ன அசட்டுத்தனம்?"

"ஒன்றும் புரியவில்லையே உங்களுக்கு?"

"என்ன புரியவில்லை?"

"மகளை இன்னொருவன் அணைப்பில் பார்க்கும் எந்தத் தந்தையும் என்ன செய்வார்.?"

"உம்."

"எரிமலையாக மாறுவார் அணைத்தவனைக் கொல்ல முயல்வார். ஏதும் செய்யாமல் மற்றவர்களையும் கூப்பிட்டு அந்தக் காட்சியைக் காட்டுவாரா? காட்டி விட்டுத் தனக்குச் சம்பந்தமில்லாதது போல் வீட்டை நோக்கி நடக்கத்தான் செய்வாரா?

இளைய பல்லவன் மூளையில் அப்பொழுதுதான் ஏதோ விபரீதத்துக்குப் பலவர்மன் விதை விதைக்கிறான் என்பது உதயமாயிற்று. "ஆம் மஞ்சளழகி! தந்தையின் போக்கு விசித்திரமாகத்தானிருக்கிறது." என்றான்.

அவன் சொன்ன பதில் அவளைத் தூக்கி வாரிப் போட்டது. "விசித்திரம் என்பதல்ல அதற்கு வார்த்தை. பயங்கரம் என்று சொல்லுங்கள் பொருந்தும்," என்றாள் மஞ்சளழகி.

"என்ன பயங்கரமிருக்கிறது இதில்! என்று கேட்டான் இளைய பல்லவன்.

## பெண் ஜென்மம்

"இந்த நாட்டுப் பழக்கம் விளைவிக்கும் பயங்கரம்." என்று அவள் கூறினாள்.

"என்ன பழக்கம் அது?" என்று அவன் வற்புறுத்திக் கேட்டான்.

அவள் விளக்கினாள் நாட்டுப் பழக்கத்தை. பழக்கத்தின் விளைவை விபரீதத்தை அச்சமென்னவென்பதையே அறியாத இளையபல்லவன் இதயத்திலும் அந்த விளக்கம் சிறிது அச்சத்தை விளைவித்தது. அந்த அச்சத்திலும் ஒன்று அவன் நினைவில் நிலைத்தது.

பெண் ஜன்மத்தின் உயர்வு தான் அது. 'பெண் ஜன்மம் சிறந்த ஜன்மம். அதற்கு இணை எதுவுமில்லை. அதற்கு உவமை இந்த மஞ்சளழகியைவிட யாருமில்லை, என்று அவன் இதயத்துக்கு மீண்டும் மீண்டும் அறிவுறுத்திக் கொண்டான்.


அவள் தனக்குச் செய்யத் துணிந்த மகத்தான தியாகத்தை எண்ணி எண்ணி வியப்பும் திகிலும் ஒருங்கே அடைந்தான் படைத் தலைவன்.

---

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 31

## பாரதியின் பின்புலங்கள்

**"காவடிச்சிந்தும், கலித்துறையும் தெம்மாங்கும், சித்திரக் கவியும் எளிமையானதும் மியும், புலமை திமிர்ந்த தல புராண வீச்சும், வறட்டுத்தத் துவவாதப் பிரதி வாதங்களும் வானளாவ எதுகை மோனைகளை வீசப் பந்தாடிய வண்ணங்களும், கடவுட்பாட்டும், காமவெறிச் சேற்றை அள்ளி வீசிய சொற்சிலம்பங்களும், ஒன்றாக கைகோத்து உலவிய எட்டயபுரம் ஜமீன்மாளிகையின்**



**விசித் திர நிழ லில், பார தியின் இளமைப் பிராயம் கழிந்தது."**

(ஒரு நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை: பக்கம்-74)

இத்தகைய இலக்கியச் சமுதாயச் சூழ்நிலைகளிலிருந்து பாரதி விலகி வெளியேறியதே பாரதியின் புதுமைக்கு முதற்படியாக அமைந்தது.

அந்நியர் ஆதிக்கம் மொழிச்சீர் குலைவு - இனப்புறக்கணிப்பு புலமையின் வறுமை - ஆங்கிலக் கல்வி ஆகியவற்றால் நசிந்து போன தமிழ் இலக்கியம் இரண்டே இரண்டு காரணங்களால் மட்டும் உயிர் சுமந்திருந்தது.

ஒன்று - பாமர மக்கள் தமது விருப்பு வெறுப்புக்களையும், அக உளைச்சல்களையும் பேச்சுத் தமிழில் நாட்டுப் புறப்பாடல்களாக வளர்த்து வந்தது.

மற்றொன்று-பிறநாட்டு ஆதிக்கத்தின் நேரடியான தாக்கங்களுக்கு ஆளாகாமல் பாமர மக்களின் நெஞ்சில் தனிப்பண்பாகக் கனன்றும் கனிந்தும் கிடந்த பக்தி.

புதிய தமிழ்க் கவிதை இந்தப் பாமரப்பாடல்களால் உருவம் கொண்டது. பக்தியைத் தனது உள்ளடகமாய்க் கொண்டது.

**உருவத்திற்கு நாட்டுப் பாடலின் எளிமையையும், உள்ளடக்கத்திற் குப் பக்தியையும் மூலமாகக் கொண்டு** தமிழ்க்கவிதை உலகிற்கு முன்னோடிகள் ஆனவர்கள் இருவர். ஒருவர் கோபாலகிருஷ்ணபாரதியார் மற்றொருவர் இராமலிங்க அடிகள்.

நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள் திருவருட்பா தொடர்ந்து வேத நாயகம் பிள்ளையின் சர்வசமயக் கீர்த்தனைகள் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணியம் இவைகளே புதிய தமிழ்க்கவிதையின் நாற்றங்கால்கள்.

இராமலிங்க அடிகள் நம் பக்தி அனுபவங்களைக் கவிதை செய்தார். கோபால கிருஷ்ண பாரதியார் இசைப்பு பண்பு மிகுந்த கீர்த்தனைகள் பாடி ஒரு புதிய தோற்றுவாய் செய்தார்.

இந்த இருவரின் இலக்கியங்களும் அடையாளம் கண்டுகொள்ளப் பெறுவதற்கு முப்பது ஆண்டுகளாயின.

இராமலிங்க அடிகளின் தோற்றத்திலிருந்து பாரதியார் மறைவுவரை சரியாக ஒரு நூற்றாண்டுகால இலக்கிய வரலாறு ஒளிந்து கிடக்கிறது.

இராமலிங்க அடிகள் கவிதையின் விளைந்த எளிமை தெளிவு குளிர்ந்த நடை ஆகியவை பாரதியின் கைகளில் வந்த பிறகு தான் இலக்கிய மரியாதையும் கவிதை மதிப்பும் பெறுகின்றன.

கவிதையின் பாதை மெல்ல மெல்லத் திருப்பப்பட்டு சமுதாயத்தைப் பார்க்கும் பார்வையில் செலுத்தப்பட்டது பாரதியின் எழுத்துக்களாலேதான்.

கலாநிதி கைலாசபதி அவர்கள் தம் சிந்துக்குத் தந்தை என்ற கட்டுரையில் குறிப்பிடுவார்.

**"இளங்கோ, வள்ளுவர், கம்பர் முதலிய கவிஞரை பாரதி பாராட்டியுள்ளார்: அழ்வாராதியோர் பாடல்களிலே அவர் ஊறித்திளைத்திருந்தார் என்பதனை அகச்சான்றுகளால் அறிகிறோம். சித்தர் வாக்குகளிலும் அவர் கரைப்பட்டிருந்தார். ஆயினும் பாரதியின் கவிதையைப் பல வழிகளில் ஆழமாகப் பாதித்த கவிஞர்கள் அவனுக்கு முன் ஒரு நூற்றாண்டு காலத் திற்குள் பிறந்தவர்கள்".**

(ஒப்பியல் இலக்கியம் பக்கம் 240)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

374

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# ஒருவர் நோய்வாய்ப்பட்டால்...

வைத்தியசாலைகளில் தாம் அவமதிப்புகளுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாவதாகக் கருதி வைத்தியசாலைகளுக்குச் செல்லாது ஆபத்துக்களை தேடிக்கொள்பவர்கள் எத்தனை பேர். வைத்தியருக்கு சொல்லும் தனது நோய் நிலை சம்பந்தமான இரகசியத்தன்மை பேணப்படுமா? என்ற சந்தேகத்தில் இக்கட்டான சில உண்மைகளை மறைப்பதனால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பெரும் தாக்கங்கள் எத்தனை? இரகசியம் பேணப்பட வேண்டிய மருத்துவத் தகவல்களைப் பத்திரிகையில் பிரசுரித்து அம்பலப்படுத்தப்படுவதால் ஏற்படும் அவமானத்தால் நிகழ்ந்துவரும் சுகாதாரத்தாக்கங்கள் எத்தனை? தராதரம் குறைந்த மருந்துகளுக்கு அனுமதி வழங்கப்படுவதால் ஏற்பட்டுவரும் பாதிப்புக்கள் எத்தனை?.

நோயுற்ற ஒருவரின் நோய் சம்பந்தமான தகவல்கள் அனைத்தும் உணர்வபூர்வமானவை. அது சாதாரண நோயாக இருந்தாலும், கடுமையான நோயாக இருந்தாலும் அல்லது அது அவரின் அந்தரங்கங்கள் சம்பந்தப்பட்ட நோயாக இருந்தாலும் அந்த நோய் சம்பந்தமான தவல்களின் இரகசியத் தன்மையை பாதுகாக்கவேண்டியது மருத்துவக் குழுவின் கடமையாகும்.

18 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவருக்கும் தமது சுகாதார நிலை சம்பந்தமான தகவல்களை வேறு எவருக்கும் தெரியப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளும் உரிமை இருக்கின்றது. சம்பந்தப்பட்டவரின் அனுமதி இன்றி அவரின் நெருங்கிய உறவுகளான பெற்றோருக்கோ, கணவன் மனைவிக்கோ அல்லது பிள்ளைகளுக்கோ கூட அவரின் மருத்துவ தகவல்களை தெரிவிக்கும் உரிமை மருத்துவக் குழுவிற்கு இல்லை.

ஒருவர் நோய்வாய்ப்பட்டால் அவரின் உற்றார், உறவினர், நண்பர்கள், எதிரிகள், விடுப்புவிசாரிப்போர் போன்ற பலதரப்பட்டவர்களும் கூட்டமாகவும் தனித்தனியாகவும் நேரடியாகவும் தொலைபேசிமூலமாகவும் மருத்துவக்குழுவிடம் நோயுற்றவரின் நோய்நிலை சம்பந்தமாக வினவுவது ஒரு சாதாரண நிகழ்வாக இருந்துவருகின்றது. அத்துடன் நிவாரணம் பெறுவதற்கும் குடும்ப உறுப்பினர்கள் விசா பெறுவதற்கும், குடும்பத்தவரின் தொழில் இடமாற்றம் தொடர்பான விடயங்களை கையாழ்வதற்கும் நோயுற்றவரின் இரகசியமான மருத்துவத் தகவல்களை கடிதம் மூலம் எழுதித்தருமாறு கேட்டு வைத்தியரிடம் படையெடுக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. சில சமயம் பத்திரிகைகள் கூட நோயுற்றவர்களின் அந்தரங்கங்கள் அம்பலப்படுத்துவதற்கு காரணமாக அமைகின்றன. உதாரணமாக "AIDS நோயாளி வைத்தியசாலையில் அனுமதி" "பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்பட்ட சிறுமிக்கு சிகிச்சை" "சட்டவிரோத கருக்கலைப்பு பெண் ஆபத்தான நிலையில் அனுமதி" போன்ற செய்திகள் சர்வசாதரணமாகி வருகின்றது.

தமது நோய்நிலை அம்பலப்படுத்தப்பட்டுவிடும் என்று அஞ்சி பலர் தமது நோய் நிலையின் உண்மையான வடிவத்தை மருத்துவரிடம் வெளிப்படுத்த தயங்குகின்றனர். இதனால் பல பாரதூரமான விளைவுகளும் ஏன் இறப்புகளும் கூட ஏற்பட்டு வருகின்றன.

மருத்துவக்குழு நோயுற்றவர்களுக்கு சொல்வது ஆலோசனைகளே தவிர கட்டளைகள் அல்ல. அது அவரது மருந்துகள் சம்பந்தமாக இருந்தாலும் சத்திர சிகிச்சைகள் சம்பந்தமாக இருந்தாலும் மருத்துவக் குழுவின் ஆலோசனைகளைக் கேட்டு இறுதித்தீர்மானம் எடுக்கும் உரிமை நோயுற்றவர்களுக்கே இருக்கின்றது. அந்த ஆலோசனைகள் கடைப்பிடிக்கப்படாவிட்டால் கூட கோபித்துக்கொள்ளும் உரிமை மருத்துவக்குழுவுக்கு இல்லை. உதாரணமாக ஒருவர் கொடுக்கப்பட்ட மருந்துகளை ஒழுங்காக பாவிக்காது உடற்பயிற்சியோ உணவுக்கட்டுப்பாடோ எதுவும் செய்யாது உடல் பருத்து புகைக்கும் தன் பழக்கத்தையும் தொடர்ந்து கொண்டு குடிபோதையில் மருத்துவரைச் சந்திக்கப்போனால் கூட அவரைக் கோபித்துக்கொள்ளும் உரிமை மருத்துவக் குழுவிற்கு இல்லை.



நோயுற்றவருடன் கலந்துரையாடாமல் அவரின் உண்மையான விருப்பு வெறுப்புக்கள் கேட்கப்படாமல் குடும்ப உறுப்பினர்களின் தீர்மானத்தின்பேரில் அவர் மீது பல சிகிச்சை முறைகளும் மற்றைய கவனிப்பு முறைகளும் திணிக்கப்படும் நிலை பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டுவிடுகிறது.

ஒருவன் நோய்வாய்ப்பட்டுவிட்டான் என்பதற்காக அவனிற்கு இருக்கும் அடிப்படை மனித உரிமைகளை மீறிச் செயற்படுவது மனிதத்துவம் ஆகாது. அந்தவகையிலே நோயுற்றவர் தனது சொந்த விருப்பப்படி நடந்துகொள்ளும் உரிமையும் மதிக்கப்படவேண்டும்.

தனது நோய் நிலை சம்பந்தமான முழு விபரங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளும் உரிமை, அதற்கு செய்யக் கூடிய வைத்திய முறைகளால் ஏற்படக் கூடிய நன்மை தீமைகள் பற்றி அறிந்து கொள்ளும் உரிமை, ஒவ்வொரு சோதனைகளும் எதற்காகச் செய்யப்படுகின்றன என்று கேட்டு தெரிந்து கொள்ளும் உரிமை, உடற்பயிற்சி மற்றும் உணவுக் கட்டுப்பாடு நடத்தை மாற்றங்கள் போன்றவற்றால் ஏற்படக்கூடிய அனுகூலங்கள் பிரதிகூலங்கள் எவை என்பதை அறிந்து கொள்ளும் உரிமை போன்ற உரிமைகளை நோயுற்ற ஒவ்வொருவரும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இதனை சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டால் மட்டுமே அவரினால் தனது சிகிச்சை முறைகள் சம்பந்தமான தீர்மானத்தை சரியான முறையில் எடுக்க முடியும்.

நோயுற்ற ஒருவர் மருந்தை பாவிக்காமல் இருப்பதற்கு விருப்பப்படலாம், சத்திரசிகிச்சை செய்யாமல் இருக்க விரும்பலாம், தொடர்ந்து புகைப்பிடிப்பதற்கு விருப்பப்படலாம் உடலில் வலியை ஏற்படுத்தக்கூடிய சோதனைகளை செய்யாமல் விடுவோம் என்று நினைக்கலாம், தொடர்ந்து குடிவகைகள் பாவிக்க ஆசைப்படலாம், வேறோரு மருத்துவரின் இரண்டாவது அபிப்பிராயத்தை கேட்க விரும்பலாம், கோயிலுக்குச் சென்று சில சமயப் பெரியவர்களின் ஆசியும் அறிவுரையும் பெற்றுவர விருப்பப்படலாம், வேறு ஒரு மருத்துவ முறைக்கு மாறுவதற்கு விருப்பப்படலாம், சொந்த விருப்பத்தின் பெயரில் வைத்தியசாலையிலிருந்து வீடு செல்ல நினைக்கலாம், உணவுக்கட்டுப்பாட்டை தவிர்த்துக்கொள்ள விருப்பப்படலாம். இது போன்ற பல விருப்பங்கள் நோய்வாய்ப்பட்ட ஒருவருக்கு இருக்க முடியும். மருத்துவத்துறையிலே ஒருவர் வாழும் காலத்தை நீடிக்க வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமோனதோ அதே அளவு முக்கியத்துவம் அவர் வாழும் காலத்திலே மகிழ்ச்சியாகவும் மனநிறைவாகவும் வாழ வேண்டும், வாழவைக்க வேண்டும் என்பதிலும் இருக்கின்றது. எனவே நோய்வாய்ப்பட்டவர்கள் தமது மனநிறைவுக்காக சுகாதாரம் சம்பந்தமான தமது சொந்த விருப்பங்களை மருத்துவக்குழுவிற்கு தயங்காமல் தெரியப்படுத்த முடியும்.

தமது உண்மையான நிலைப்பாட்டை அல்லது விருப்பங்களை மருத்துவக்குழுவிற்கு சொல்வதனால் அவர்களின் மருத்துவக் கவனிப்பில் பாதிப்பு ஏற்படும் என்று கருதிவிடமுடியாது. மருத்துவக் குழு நோய்வாய்ப்பட்டவருக்கு சில விடயங்களை தெளிவுபடுத்த இது உதவியாக இருக்கும். சரியான ஆலோசனைகளை நோயுற்றவர் கடைப்பிடிக்காது விட்டால் அவருக்கு ஏதாவது ஆபத்து நிகழ்ந்து விடுமோ என்ற மனிதாபிமான அடிப்படையிலே நோயுற்றவர்களை கண்டிக்கும் நிகழ்வு பல நடைபெற்றவண்ணம்தான் இருக்கின்றன.

கண்ணுக்கு முன்னால் ஒருவர் ஆபத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் பொழுது அவரை தடுத்தும் கேட்காமல் அதே திசையில் அவர் சென்றுகொண்டிருக்கும் பொழுது அதனை அமைதியாக பார்த்துக்கொண்டிருப்பது யாருக்கும் மிகவும் கடினமானதாக இருக்கும். இந்த நிலையே பல சமயங்களில் மருத்துவனுக்கும் ஏற்படுகிறது. எது எவ்வாறாக இருப்பினும் நோயுற்றவருடன் கோபப்படுவது சரியான செயலாகாது.

மருத்துவ ஆலோசனைக்கு எதிராக ஒருவர் வீடு செல்லும் சந்தர்ப்பங்களில்கூட நோய்நிருபண அட்டையையும் வீட்டிலே பாவிப்பதற்கான மருந்துகளையும் தொடர்ந்து வைத்தியசாலைக்கு வரவேண்டிய திகதிகளையும் கேட்டு பெற்றுக்கொள்ளும் உரிமை நோயுற்றவருக்கு இருக்கின்றது. மனம் மாறி அல்லது நோய் கடுமையாகி மீண்டும் அவர் வைத்தியசாலைக்கு வந்து அனுமதிபெற விருப்பப்படின் எந்தவித மனச்சஞ்சலமும் இன்றி வைத்தியசாலைக்கு வந்து அனுமதிபெறும் உரிமை அவருக்கு இருக்கின்றது.

தொடர்ந்து மருந்தெடுக்க வேண்டிய தேவை உடையவர்கள் வைத்தியசாலை கிளினிக்கில் OPD ஊடாக தாமாகவே சென்று சேர்ந்து கொள்ளும் உரிமை இருக்கிறது. இதற்கு வேறு வைத்தியர்களின் சிபார்சு கடிதங்களோ அனுமதிக் கடிதங்களோ அவசியமில்லை.

நோயுற்றவர்களின் கவனிப்பு முறை உணர்வு சம்பந்தப்பட்டது. மனிதாபிமானம் சம்பந்தப்பட்டது. பல மனங்களின் உணர்ச்சி சம்பந்தப்பட்டது. மனச்சாட்சி சம்பந்தப்பட்டது. உயிருக்கும் உடலுக்கும் உணர்வுகளுக்கும் உறவுகளுக்கும் இடையேயான போராட்டமாகவே மருத்துவச்சிகிச்சைமுறை அமைந்திருக்கிறது.

ஒவ்வொரு நோயுற்றவரும் குணப்பட்டுச் செல்லும் பொழுது அவரும் அவரது சுற்றமும் மட்டுமல்ல மருத்துவக் குழுவும் அவர்களுடன் சேர்ந்து மட்டற்ற மகிழ்ச்சி அடையும். ஒரு நோயாளிக்கு பாரதூரமான பாதிப்புகள் ஏற்பட்டுவிட்டால் அல்லது நோயுற்றவர் இறந்துவிட்டால் அவரது சுற்றத்துடன் சேர்ந்து மருத்துவக்குழுவின் உள்மனமும் துயரம் கொள்ளும்.

மருத்துவத்துறையில் மட்டுமல்ல எந்தத்துறையிலும் இருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு சட்டக்கட்டுப்பாடுகளுக்கு மேலதிகமாக புரிந்துணர்வும் மனிதாபிமான உணர்வுகளும் கூட்டு முயற்சியுமே முக்கியமாக அமைகிறது.

Dr.சி.சிவன்சுதன்,
வைத்திய நிபுணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னராட்சி கோரி நேபாளத்தில் போராட்டம்

**(காத்மண்டு)**
**நேபாள நாட்டில் மீண்டுமொரு மன்னராட்சி கோரி நடைபெற்ற போராட்டம் வன்முறையில் முடிந்ததை அடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.**



நேபாளத்தில் மன்னர் ஆட்சி இருந்த நிலையில், கடந்த 2008ஆம் ஆண்டு அது முடிவுக்கு வந்தது. இதை யடுத்து, அங்கு ஜனநாயக முறைப்படி ஆட்சி நடை பெற்று வருகிறது.

இந்த நிலையில், மீண்டும் மன்னராட்சி கோரி நேபாள தலைநகர் காத்மாண்டுவில் நேற்று வியாழக்கிழமை மாபெரும் போராட்டம் நடை பெற்றது.

அதில் ஏராளமான மக்கள் ஒன்று கூடி போராட்டத்தில் ஈடுபட்டு பேரணியாகச் சென்றபோது பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தியதால், போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கற்களைக் கொண்டு பொலிஸாரை தாக்கிய நிலையில் பதிலுக்கு தடியால் அடித்தும், தண்ணீர் பாய்ச்சி அடித்தும் பொலிஸார் போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்தினர்.

இவ்வாறான நிலையில், மீண்டும் போராட்டம் வெடிக்காமல் தடுக்கும் நோக்கில் காத்மாண்டுவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், உள்ளூர் நிர்வாகம் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. சில பகுதிகளில் மக்கள் ஒன்று கூடுவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. (நி-5)

# ஹவுதியின் ஆளில்லா விமானங்களை சுட்டு வீழ்த்திய அமெரிக்கா



(வோஷிங்டன்)

செங்கடலில் ஏமனில் உள்ள ஹவுதி பயங்கரவாத அமைப்பின் நடமாட்டம் அதிகரித்த நிலையில் சர்வதேச நாடுகளுக்கு இது மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.


இந்நிலையில், செங்கடலில் பயணித்துக்கொண்டிருந்த அமெரிக்க போர்க்கப்பலை நெருங்கி வந்த ஹவுதி பயங்கரவாத அமைப்பின் பல ஆளில்லா விமானங்களை சுட்டுவீழ்த்தியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க போர்க்கப்பல் செங்கடலில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போதே இந்த ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், ஆளில்லா விமானத் தாக்குதலால் கப்பலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் ஜப்பானிய சரக்குக் கப்பலை ஹவுதி பயங்கரவாதிகள் கடத்திச் சென்றது.

இந்நிலையில் கடத்திச் செல்லப்பட்ட கப்பலையும் அதன் பணியாளர்களையும் உடனடியாக விடுவிக்குமாறு அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது. (நி-5)

# இந்தியாவிலுள்ள தூதரகத்தை மூடிய ஆப்கானிஸ்தான்



(காபூல்)

இந்திய அரசாங்கத்தின் தொடர்ச்சியான சவால்கள் காரணமாக புதுடில்லியில் உள்ள ஆப்கான் தூதரகத்தை நிரந்தரமாக மூடுவதாக ஆப்கானிஸ்தான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆப்கான் தூதரகம் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கையொன்றிலேயே இந்த விடயம் தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை நேற்றுமுன்தினம் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் கடந்த செப்டெம்பர் 30 ஆம் திகதி முதல் தூதரகத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இஸ்ரேல்-ஹமாஸ் இடையே நடைபெற்ற கைதிகள் பரிமாற்றம்

(காசா)

போர் நிறுத்தத்தின் முதலாவது நாளில் ஹமாஸ் அமைப்பினர் 25 பணயக் கைதிகளை விடுதலை செய்த அதேநேரம் இஸ்ரேல் சிறையிலிருந்த 39 பேரை விடுதலை செய்துள்ளது.

ஹமாஸ்- இஸ்ரேல் இடையில் நான்கு நாட்களுக்கு தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. இந்த நான்கு நாட்களில் ஹமாஸ் பிடித்து வைத்திருக்கும் பணயக்கைதிகளில் 50 பேர் விடுதலை செய்ய வேண்டும்.

அதேவேளையில் இஸ்ரேல் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள 150 பாலஸ்தீனர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். இது தொடர்பாக ஹமாஸ்- இஸ்ரேல் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தம் நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் தாய்லாந்தைச் சேர்ந்த 12 பேர், இஸ்ரேலைச் சேர்ந்த 13 பேர் என 25 பேரை ஹமாஸ் அமைப்பினர் விடுதலை செய்தனர். அதேவேளையில் இஸ்ரேல் சிறையில் உள்ள 39 பேர் விடுதலை செய்யப்பட்டனர். இதில் 25 பேர் பெண்கள், 14 பேர் இளைஞர்கள்.



33 பேர் மேற்கு கரையில் உள்ள சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 6 பேர் ஜெருசலேமில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்த தகவலை சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் குழு தெரிவித்துள்ளது.

விடுதலை செய்யப்பட்டதும் சிறையில் இருந்து வெளியே வந்த பெண்கள் தங்களது குடும்பத்தினருடன் இணைத்தனர். அப்போது, ஆனந்தக் கண்ணீருடன் அவர்களை வரவேற்றனர்.

இளைஞர்களை தோளில் தூக்கி சந்தோசத்தை வெளிப்படுத்தினர். தெருக்களில் ஆயிரக்கணக்கானோர் கூடி வாணவேடிக்கை நிகழ்த்தி சந்தோசத்தை வெளிப்படுத்தினர்.

இஸ்ரேல் சிறையில் இருந்து மொத்தம் 150 பேர் விடுதலை செய்யப்பட இருக்கிறார்கள். 250 பணயக் கைதிகளை ஹமாஸ் விடுதலை செய்யும்போது சுமார் ஆயிரம் பேர் இஸ்ரேல் சிறையில் இருந்து விடுதலை செய்யப்படலாம் எனத் தெரிகிறது. பணயக் கைதிகள்- கைதிகள் பரிமாற்றத்தில் கட்டார் முக்கிய பங்குவகித்தது குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணெண்ணெய், டீசலுக்கு வரி விலக்கு

## அமைச்சர் காஞ்சன

(கொழும்பு)

மண்ணெண்ணெய் மற்றும் டீசல் விலையில் வற்வரி அதிகரிப்பு தாக்கம் செலுத்தாது வரி விலக்கு வழங்கப்படும். அடுத்த ஆண்டு முதல் காலாண்டுப் பகுதியில் மத வழிபாட்டு தலங்களுக்கான மின் கட்டண திருத்தத்தில் சலுகை வழங்க எதிர்பார்த்துள்ளோம் என மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தில் மின் சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தின் போது எதிரணியினர் முன்வைத்த கேள்விகளுக்கு மேற்கண்டவாறு பதிலளித்தார்.

வற்வரி அதிகரிப்புடன் எரிபொருள் விலை சடுதியாக அதிகரிக்க கூடும் என எதிர்த்தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். வற்வரி தொடர்பில் ஆலோசனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இறுதி முடிவு அடுத்த மாதம் 10 ஆம் திகதி அறிவிக்கப்படும். அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள வற்வரியில் மண்ணெண்ணெய் மற்றும் டீசலுக்கு வரி விலக்களிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இரண்டாவது எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அம்பாந்தோட்டையில் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.இதற்கான நிர்மா ணிப்பு பணிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும்.

இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை உபகுழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. அடுத்த வாரம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கும் என எதிர்பார்க்கிறேன். இரண்டாவது சுத்திகரிப்பு நிலையத்தை ஸ்தாபித்தவுடன் பெற்றோலுடனான இதர பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும்.

அத்துடன் 27 ஆயிரம் மத வழிபாட்டுத் தலங்கள், பல்கலைக்கழகங்கள்,பாடசாலைகள்,பிரதேச மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு ஒருவருட காலத்துக்குள் புதுப்பிக்கத்தக்க சக்தி வள பயன்பாட்டுடன் மின்சாரம் விநியோகிக்கப்படும் எனத் தெரிவித்தார். (நி-5)

அன்பு வாசகர்களே!

உங்கள் வலம்புரி

இப்போது...

இல. 191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரியில் இயங்குகிறது.

(யாழ். பிறவுண் வீதியில் அரசடிச் சந்திக்கும் கலட்டி சந்திக்கும் இடையில்)

மேலதிக தொடர்புகளுக்கு

076 097 3121

021 222 3378

## வேலை வாய்ப்பு


முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாயில் அமைந்துள்ள **Tourist Beach Resort** இற்கு முகாமையாளர் தேவை.

.தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் ஆங்கிலத்தில் புலமையும். தமிழ் பேசும் திறனும் இருத்தல் வேண்டும். உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சேவைகளை வழங்குவதற்கு கணனி அறிவு மிக அவசியம். விண்ணப்பங்கள் ஏற்ற பின் தனி நேர்முக தேர்வின் பின் வேலைக்கு அமர்த்தப்படும். ஆரம்ப மாத சம்பளம் 70000+ **Service charge** ஒரு வருட தகுதி காண் காலத்திற்குப் பின் செயற்றிறனைப் பொறுத்து சம்பளம் அதிகரிக்கப்படும். பணியாளர் விடுதி நீர்.மின்சாரம் உட்பட இலவசம். வெற்றிகரமாக காலாண்டை நிறைவு செய்த விண்ணப்பதாரருக்கு சனி. ஞாயிறு உட்பட மாதத்திற்கு 4 நாட்கள் விடுமுறை வழங்கப்படும். தற்போதுள்ள **Resident Supervisor** மேலாளரின் செயற்பாடுகளுக்கு உதவுவார். விண்ணப்பதாரர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படும் போது பணி அனுபவம். கடந்தகால பணி இடங்களில் பெற்ற சான்றிதழ்களை வைத்திருக்க வேண்டும். ஆர்வம் உள்ளவர்கள் உரிமையாளரின் அலைபேசி எண் 077 351 5407 இற்கு காலை **7 am - 10 am** வரை தொடர்பு கொண்டு நேர்முக பரீட்சைக்கான நேரத்தை தெரிந்து கொள்ளவும். (சி-2173)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2975

### சனா

பரோட்டா, பிரியாணின்னு சாப்பிறவன் எல்லாம் பெரிய Foodie இல்லடா.



உப்புமாவா இருந்தாலும் அசராம 3 தடவ வாங்கி சாப்பிட்றான் பாரு அவன் தான் Real Foodie.

### தர்சன்

நம்மட தோல்வியைக் கண்டு ஒருத்தன் வெடி வெடிச்சு கொண்டாடுறான்டா



நம்மள பார்த்து பயப்படுறவனா இருக்கனும். இல்லையா நம்மக்கிட்ட ஏற்கனவே வேண்டினவனா இருக்கனும்.

### கவின்

இன்னும் ஒரு மாசத்துல எல்லாம் மாறப் போது. நம்ம வாழ்க்கையா மாப்பிள்ள.



வாழ்க்கையா காலண்டர் மாமா.

### றொசாந்

கோடி ரூபாய் கொடுத்தாலும் சில விஷயங்கள் செய்யமாட்டேன். அதில் ஒண்டு வெளிநாட்டுக்கு போறது. கோடி ரூபா குடுத்தா நாங்க ஏன்டா வெளிநாட்டுக்கு போறோம் லூசுப் பயலே.



### மரியா

மச்சான் வாடா Ground க்கு போய்ட்டு வருவம்




மச்சான் நான் கனடா வந்திட்டன்டா.

### பிரியா

பண்ணுறது கிழமைக்கு ஒரு love.



இதுல உனக்காகத்தானே உயிர் வாழ்கிறேன் என்டு Status வேற.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையைச் செய்யத் துணிவுடன் இரு. அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்.

~ சிம்மன்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## என்றோ ஒருநாள் பாராளுமன்றத்தில் மாவீரர்களை நினைவேந்துவீர்கள்

மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கவிடக் கூடாது என்று பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய சரத் வீரசேகர; மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க அனுமதிப்பது அனுதாபமாகாது. மாறாக அது கையாலாகாத்தனம் என வீரிட்ட அவர் அமெரிக்காவில் ஒசாமா பின்லேடனை நினைவுகூர முடியுமா? என்றும் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை தமிழ் மக்களுக்கு எதிராகக் கருத்துரைக்கும் சரத் வீரசேகரவின் மூளையைப் பரிசோதிக்க வேண்டுமென அநுர குமார திஸாநாயக்க கூறியிருந்ததும் இங்கு கவனிக்கத்தக்கது.

சரத் வீரசேகரவின் மூளையைப் பரிசோதிப்பது சிங்கள மக்களைப் பொறுத்தவரை அவசியமான விடயமாக இருக்கலாம். எங்களைப் பொறுத்தவரை சரத் வீரசேகர எங்களுக்கு ஒரு துரும்பாகக்கூட இல்லை.

யாரோ கொடுக்கின்ற இலஞ்சத்துக்காக ஊளையிடுகின்ற இத்தகையவர்களைத் தமிழ் மக்கள் ஒரு பொருட்டாகக் கருதவே மாட்டார்கள்.

தவிர, மாவீரர்களைப் பயங்கரவாதிகள் என்று கூறுகின்ற சரத் வீரசேகரவுக்கு ஓர் உண்மை விளங்கவில்லை.

அதாவது மாவீரர்கள் என்போர் தமிழ் மக்களின் பிள்ளைகள். அவர்கள் தமிழ் இனத்துக்காக உயிர்நீத்த தியாகிகள் என்பதாலேயே அவர்களைத் தமிழ் மக்கள் பூசிக்கின்றனர்.

எனவே நீங்கள் அனுமதித்தாலென்ன, அனுமதிக்காமல் விட்டாலென்ன மாவீரர்களைத் தமிழ் மக்கள் தங்கள் இதயத்தில் அஞ்சலிப்பர். இது சூரிய சந்திரர் உள்ளவரை நடைபெற்றே ஆகும்.

தவிர, மாவீரர்களை நினைவேந்துவதற்கு மக்களை அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இலங்கைப் பாராளுமன்றத்தில் முன்வைத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் முன்வைத்த கோரிக்கையை ஏற்று மாவீரர்களை நினைவேந்துவதற்கான வசதிகளை இலங்கை அரசாங்கம் செய்யுமாக இருந்தால், அது இந்த நாடு ஒற்றுமையை – சமாதானத்தை நோக்கிப் பயணிக்கிறது என்பதற்கான அறிகுறியாக அமையும்.

இல்லை. அனுமதிக்க முடியாதென்றால், பரவாயில்லை. கெடுகுடி சொற்கேளாது என்று விட்டுவிடலாம்.

ஆனால் ஓர் உண்மையை மட்டும் இங்கு கூறியாக வேண்டும்.

அதாவது இன்று நீங்கள் மாவீரர்களை நினைவேந்துவதற்குத் தடை விதிக்கலாம்.

ஆனால் என்றோ ஒருநாள் பாராளுமன்றத்தில் கூட மாவீரர்களை நினைவேந்துகின்ற நிலைமை நிச்சயம் வரும் என்பதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள்.

# பொதுத் தேர்தல் கோரும் எதிரணி

# ஜனாதிபதி தேர்தலை முதலில் நடத்திட அரசாங்கம் முஸ்தீபு

2024ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக உள்ளதால் ஆளும் எதிர்க் கட்சிகள் தேர்தல்களை எதிர்கொள்வதற்கான வியூகங்களை வகுக்க ஆரம்பித்துள்ளன.

ஒருபுறம் பொதுத் தேர்தல் பற்றியும் மறுபுறம் ஜனாதிபதித் தேர்தல் பற்றியும் இருதரப்பினரும் பேச்சுகளை நடத்துகின்றனர்.

எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பொதுத் தேர்தலொன்றையே முதலில் விரும்புகிறது. கிராம மட்டத்தில் அரசாங்கத்துக்கான செல்வாக்கு பாரிய அளவில் குறைந்துள்ளதாக அண்மையில் வெளியாகிய சில கருத்துக் கணிப்புகள் வெளிப்படுத்தியுள்ளதால் பொதுத் தேர்தலை இலகுவாக வெற்றி கொள்ள முடியும் என ஐக்கிய மக்கள் சக்தி கருதுகிறது.

என்றாலும், ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவது அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது. சரிந்த செல்வாக்கை மீண்டும் நிலைநிறுத்துவதற்கான முயற்சிகளில் ஜனாதிபதி ஈடுபட்டு வருவதுடன், அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் மனநிலைகளிலும் ஓரளவு மாற்றம் கண்டுள்ளது.

இனப் பிரச்சினைக்கான தீர்வு, மலையக மக்களுக்கு காணி உரிமை வழங்குவது உள்ளிட்ட விடயங்கள் ஊடாக தமிழ் மக்களிடையே தமது செல்வாக்கை ஜனாதிபதி அதிகரித்துக்கொள்ளும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார்.

அதேபோன்று முஸ்லிம் வாக்குகளை தம்பக்கம் திருப்புவதும் ஜனாதிபதியின் நோக்கமாக உள்ளது. இதற்கான சில அறிவிப்புகள் கூட விரைவில் வெளியாக கூடுமென தெரிய வருகிறது.

அதன் காரணமாக பொதுத் தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது அரசாங்கத்தின் திட்டமாக உள்ளது.

இந்நிலையில் 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்பது அரசியலமைப்பு ரீதியான சட்டமாக உள்ளது.

அதனால் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அரச ஊழியருக்கென அதிகரிக்கப்பட்டுள்ள கொடுப்பனவில் ரூ.5 ஆயிரம் ஜனவரியில்

(கொழும்பு)

வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக் கப்பட்ட அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவில் இருந்து 5 ஆயிரம் ரூபாவை ஜனவரி மாதம் முதல் வழங்க அரசு கவனம் செலுத்தியுள்ளது.

ஓய்வூதியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 2 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவை ஜனவரி மாதம் முதல் முழுமையாக வழங்குவதற்கும் இணக்கம் வெளியிடப் பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா வாழ்வாதாரச் செலவுக் கொடுப்பனவாக வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்டது.

அதில் 5 ஆயிரம் ரூபாவை ஏப்ரல் மாதத்திலும் மீதித் தொகையை ஒக்ரோபர் மாதத்திலும் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில், எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் உரிய அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பில் ஒரு பகுதியை வழங்குவது குறித்தும், ஜனவரி மாதம் முதல் 5 ஆயிரம் ரூபாவும், ஏப்ரல் மாதம் முதல் முழுமையாகப் 10 ஆயிரம் ரூபாவை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தின் அரச வருவாய் பிரிவின் 2024 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் நிதி நிலை அறிக்கையின் புள்ளி விவரங்களுக்கமைய, சம்பள அதிகரிப்பை ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்த முடியும் எனத் தெரிய வந்துள்ளது. (ம-7)

## நாட்டின் சட்டதிட்டங்களை மீறும் அமைச்சரவை

### சஜித் காட்டம்

கிரிக்கெட்டை நிர்வகிப்பதற்கு இடைக்கால குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவையின் அனுமதியை பெற்றுக்கொள்ளுமாறு விளையாட்டுத்துறை அமைச்சரிடம் கோரியுள்ள அமைச்சரவை தீர்மானம் விளையாட்டு சட்டங்களை மீறும் செயலாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

“கிரிக்கெட்டை நிர்வகிப்பதற்கு இடைக்கால குழுக்கள் அல்லது திறமையான அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் விளையாட்டு அமைச்சருக்கே உள்ளது. விளையாட்டு அமைச்சின் விவகாரங்களில் அமைச்சரவை எவ்வாறு தலையிட முடியும்?” என எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ம-7)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2023
“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்”
-தியோடர் ரூஸ்வெல்ற்
(அமெரிக்காவின் 26 ஆவது ஜனாதிபதி)

## சீனி உற்பத்தியை அதிகரிக்க திட்டம்

பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியை அதிகரிப்பது தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு அடுத்த ஆண்டு சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்கான செயல்திட்டத்தை மூன்று மாதங்களுக்குள் தயாரித்து ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

அண்மையில் பாராளுமன்றத்தில் கூடிய போதே இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையில் சீனியின் தேவை சுமார் 600,000 மெட்ரிக் தொன்களாகும்.

இலங்கையில் உள்ளூர் விநியோகத்திற்காக 10 வீதம் அல்லது அறுபதாயிரம் மெட்ரிக் தொன் சீனி மாத்திரமே உற்பத்தி செய்யப்படுவதாக பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியை அதிகரிப்பது தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு அறிக்கையில் தெரிய வந்துள்ளது. (ம-7)

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2023
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
JSAC
“பெண்கள் பாதுகாப்பை உணர வைப்பது ஒவ்வொருவரினதும் கடமை. அனைவரும் இணைந்து பாதுகாப்பான சமத்துவமான சமூகத்தை உருவாக்குவோம்.”
16
2023
யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா இரட்டைக்கொலை விவகாரம் தலைமறைவாகியிருந்த ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலை சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் ஒருவர் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த யூலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் இருவர் மரணமடைந்திருந்தனர். குறித்த இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஆறுபேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இதன்போது, மேலும் மூன்று சந்தேக நபர்களுக்கு எதிரான சாட்சியங்கள் உறுதிப்படுத்தப்பட்டமையினால் அவர்களை கைது செய்ய குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

குறித்த மூவரும் தலைமறைவாக இருந்ததால் அவர்களது கடவுச்சீட்டுகள் நீதிமன்றத்தால் முடக்கப்பட்டுள்ளதுடன், அவர்களை கைது செய்வதற்கான பகிரங்க பிடியாணை உத்தரவு கடந்த செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி வவுனியா நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்த குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் சந்தேக நபர்களில் ஒருவர், ஹொரவப் பொத்தானை பகுதியில் மறைந்திருந்த நிலையில் அவரை கைது செய்துள்ளனர்.

4ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-250)

# 7தங்க பதக்கங்களை தமதாக்கிய மன்னார் கல்வி வலயம்

(மன்னார்)

இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கம் மற்றும் கல்வி அமைச்சின் விஞ்ஞான பிரிவின் கீழ் இயங்கும் வெளிக்கள கற்கை நிலையத்தின் ஊடாக தேசிய ரீதியாக தமிழ் சிங்கள மொழிகளில் நடாத்தப்பட்ட இளம் விவசாயி விஞ்ஞானி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் "little Agriculturist Awards" போட்டியில் தமிழ் மொழிமூல போட்டியாளர்களுக்கான விருதுகள் அனைத்தையும் மன்னார் வலயப் பாடசாலைகள் கைப்பற்றியுள்ளது

வடமாகாண ரீதியாக பல வலயங்கள் குறித்த போட்டியில் கலந்து கொண்ட போதிலும் மன்னார் கல்வி வலயம் 7 தங்க பதக்கங்களையும் 9 வெள்ளிபதக்கங்களையும் 12 வெண்கல பதக்கங்களையும் தன தாக்கி கொண்டுள்ளது

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் உள்ள பள்ளிமுனை லூசியா மகா வித்தியாலயத்தை சேர்ந்த 5 மாணவர்கள் தங்கப் பதக்கத்தையும் மன்/புனித சவேரியார் பெண்கள் பாடசாலை மாணவிகள் 2 தங்கப்பதக்கங்களையும் சுவிகரித்து கொண்டுள்ளனர். (நி-5-285)



மாவீரர் வாரத்தில் ஐந்தாம் நாளான நேற்று தருமபுரம், விசுமடு பகுதியில் மாவீரர்களின் பெற்றோர் களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

(படம்: தேவானந்தன்)


துரோகிகளின் சதியில் மாண்ட
16 வருட நினைவில்



அமரர்
சிமையானந்தகுரு
பரிமளன்

மலர்வு: 29.01.1978
உதிர்வு: 26.11.2007

பாசத்தின் திருவுருக்களாய் பிறந்த
எம் அன்புத்தம்பியே
கூடிழந்த பறவைகளாய்
தவிக்கின்றோம் நாங்கள்.
ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும்
ஆறாது உம்
துயரம் உனை அழித்த
அரக்கர்கள் அழியும்
காலமிது அவர்கள் வருவார்கள்
உன்னிடமே காத்திருப்பாய்
உன் துணையாய்
1. காலம் விரைவில் பதில் சொல்லும்
2. தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் இறுதியில் தர்மமே வெல்லும்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை. (17967)

பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்.



மணிவிழா வாழ்த்துக்கள்



24.11.2023 இல்
பணி ஓய்வு பெற்றுச்சென்ற
யா/உரும்பிராய் சந்திரோதய
வித்தியாலய அதிபர்
திருமதி.
வாசுகி
மன்மதராஜன்
அவர்களிற்கு
மணிவிழா வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம். (18000)

கோட்டக்கல்விப் பணிப்பாளரும் அதிபர்கள் சங்கமும்
கோப்பாய்க் கல்விக் கோட்டம்.



## பணிப்பெண் தேவை

யாழ். நகரில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை. 40 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (17999)

தொடர்புகளுக்கு
077 248 7316



## வேலையாட்கள் தேவை

புடைவை நிலையம் ஒன்றில் சேலை வியாபாரத்தில் ஈடுபடக் கூடிய அனுபவமுள்ள/பழகவிரும்பும் ஆண் வேலையாட்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (17999)

தொடர்புகளுக்கு
077 202 7029


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 600 | 700 | 600 | 700 |
| தக்காளி | 400 | 450 | 350 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 150 | 160 |
| கோவா | 350 | 300 | 350 | 400 |
| கரட் | 250 | 400 | 380 | 500 |
| பூசணி | 100 | 100 | 100 | 100 |
| புடோல் | 250 | 250 | 200 | 240 |
| வாழைக்காய் | 180 | 180 | 180 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 450 | 500 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 300 | 350 |
| பாகற்காய் | 550 | 500 | 500 | 600 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 600 | 550 | 450 | 600 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 400 |
| பீற்றூட் | 250 | 200 | 200 | 400 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 700 |
| முருங்கைக்காய் | 550 | 700 | 400 | 800 |
| போஞ்சி | 500 | 500 | 500 | 700 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | 350 | 320 |
| கீரை - 1 பிடி | 150 | 100 | 100 | 200 |
| தேசிக்காய் | 1500 | 1200 | 1200 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 450 | 500 | 500 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 120 | 150 | — | 300 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 180 | 50 | 40 |
| ஈரப்பலா | 150 | 150 | 150 | 240 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 03ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கனமானது முதல் மிகக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வங்காள விரிகுடாவில் அந்தமான் தீவுகளுக்கு தெற்காக காற்றழுத்த தாழ்வு நிலை ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது.

அது எதிர்வரும் 29ஆம் திகதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக உருவாகி வடமேற்கு திசை நோக்கி நகரும் வாய்ப்புள்ளது.

தற்போதைய மாதிரிகளின் கணிப்பின்படி இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலை கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களூடாகவே நகரும் வாய்ப்புக்கள் உள்ளன.

எனினும் இது உருவாகும் காலப்பகுதியில் நிலவும் வளிமண்டல வெப்ப நிலை, சமுத்திர மேற்பரப்பு வெப்ப நிலை, காற்றழுத்த தாழ்வு நிலையின் அமுக்க சாய்வுத் தன்மை மற்றும் தாழ்வு நிலைக்கு கிடைக்கும் மறை வெப்ப சக்தி என்பவற்றை பொறுத்து நகரும் திசை மாற்றமடையலாம்.

மேற்குறிப்பிட்ட காரணிகள் இது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையில் இருந்து புயலாக வலுப்பெறுமா என்பதனையும் தீர்மானிக்கும் எனத் தெரிவித்தார். (ம-7)

## மன்னாரில்...

அனுமதி வழங்கியுள்ளதாக சட்டத்தரணி எஸ்.டினேசன் தெரிவித்தார்.

இவ்வழக்கு விசாரணை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் 26, 27ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள உயிர் நீத்தவர்களுக்கான நினைவேந்தலுக்கு எதிராக அடம்பன் பொலிஸார் நேற்று மன்னார் நீதிமன்றத்தில் தடை உத்தரவு கோரியிருந்தனர்.

குற்றவியல் நடைமுறைக்கோவை 106ஆம் பிரிவின் கீழ் இத்தடை உத்தரவை அடம்பன் பொலிஸார் கோரினர். இந்த வழக்கு நேற்று பகல் நீதிமன்றத்தில் பதில் நீதவான் இ.கயஸ் பெல்டானோ முன்னிலையில் இடம்பெற்றது.

இவ்வழக்கில் சுமார் 20 பேரின் பெயர்கள் தனி நபர்களாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட 20 பேரின் பெயர்களையும் 21ஆவதாக பொதுமக்களையும் குறிப்பிட்டு இத்தடை உத்தரவு கட்டளையினை பொலிஸார் கோரியிருந்தனர்.

பதில் நீதவான் முன்னிலையில் விசாரணை இடம்பெற்றபோது, நினைவேந்தலை அமைதியான முறையிலும், அமைதிக்கு பங்கம் ஏற்படாத வகையிலும் நினைவுகூர மன்னார் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், நினைவேந்தல் நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான இலச்சினைகள் மற்றும் கொடிகளை பயன்படுத்தாமல், அமைதியான முறையிலான நினைவுகூரலுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது என சட்டத்தரணி தெரிவித்தார்.

அத்தோடு, முருங்கன் பொலிஸார் 4 நபர்களுக்கு எதிராகவும், மடு பொலிஸார் 2 நபர்களுக்கு எதிராகவும் தடை உத்தரவு கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மாவீரர்...

மில்லங்கள் மற்றும் யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு உடுத்துறை துயிலுமில்லங்களில் நடைபெறவுள்ள மாவீரர் நினைவேந்தலில் ஒலிபெருக்கி பயன்பாடு மற்றும் துயிலுமில்ல கட்டுமானம் உள்ளிட்ட சில விடயங்களை உள்ளடக்கி தடை கோரி பொலிஸாரால் மன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் பொலிஸாரின் மனுவை நிராகரித்தது.

எதிர் மனுதாரர்களின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், கேசவன் சயந்தன் உள்ளிட்ட பலரும் ஆஜராகியிருந்தனர். (ம-7)

## தலைவர்...

தாயகத்திலும் புலத்திலும் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டம் விமரிசையாக கொண்டாடப்பட்டது.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் புலம்பெயர் தேசங்களில் பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வு வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மாவீரர் பெற்...

மாவீரர் தினத்தை முன்னிட்டு ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று முன்னெடுக்கப்படவிருந்த மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வானது வெல்லாவெளி பொலிஸாரால் நீதிமன்ற தடையுத்தரவு பெறப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டது.

இந்நிகழ்வு ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உப தலைவர் என்.நகுலேஸ் மற்றும் மாவட்ட ஊடகப் பேச்சாளர் சாந்தன் ஆகியோரின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வானது ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில் குறித்த இடத்துக்கு விரைந்த வெல்லாவெளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் கட்சியின் உப தலைவர் என்.நகுலேஸை அழைத்து களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றத்தினூடாகப் பெறப்பட்ட தடையுத்தரவினை வழங்கி நிகழ்வை உடன் நிறுத்துமாறு தெரிவித்து கைது செய்தனர்.

இந்த வழக்கு களுவாஞ்சிக்குடி நீதிமன்றத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 07ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## துயி...

அடித்து உடைத்துச்சேதப் படுத்தியுள்ளனர்.

அத்துடன் சோடிக்கப்பட்டிருந்த கொடிகளையும் அறுத்து எறிந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

நாளை 27ஆம் திகதி மாவீரர் நினைவேந்தலை யொட்டி வாகரையிலுள்ள கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தை ஏற்பாட்டுக் குழுவினர் துப்புரவுப் பணி மேற்கொண்டு அங்கு காணியைச் சுற்றி கம்பி வேலி அமைக்கப்பட்ட கொங்கிறீட் தூண்களுக்கு சிவப்பு, மஞ்சள் வர்ணக் கொடிகளை கட்டியிருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு மாவீரர் துயிலும் இல்லத்துக்குள்ந்த விஷமிகள், அங்கு அமைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் நினைவுக் கல்வெட்டுக்களையும், கம்பி வேலி அமைக்கப்பட்ட கொங்கிறீட் தூண்களையும் அடித்து உடைத்துச் சேதப்படுத்தியுள்ளதுடன் சோடிக்கப்பட்டிருந்த கொடிகளையும் அறுத்து எறிந்துள்ளனர். (ம-7)

## நினைவேந்தலை...

னால் நேற்றைய தினம் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த மனு மீதான விசாரணை நாளை திங்கட்கிழமை காலை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கோப்பாய் துயிலுமில்லம், நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட நினைவு மண்டபம் என்பவற்றில் மாவீரர் நாள் நினைவேந்தல் நடைபெறவுள்ள நிலையில் அதற்கு தடை கோரியே பொலிஸாரால் மனு தாக்கல் செய்யப்பட்டது. (ம-7,33)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

லக்கி 7 VIP
திகதி 2023.11.25
சீட்டிழுப்பு இலக்கம் 135
B 1 3 1 8 0 3 B

தன நிதானய
திகதி - 2023.11.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1339
Q 40 51 58 81 Q
08929

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3551
சீட்டிழுப்பு திகதி 25.11.2023
A 01 03 27 80
A 76876

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.25
சீட்டிழுப்பு இலக்கம் 0618
சிம்மம் 18 40 41 62 சிம்மம்
22408 09

மஹஜன சம்பத
திகதி 2023/11/25
சீட்டிழுப்பு இலக்கம் 5309
P 8 9 7 3 7 0

மெகா பவர்
திகதி 25/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1657
S 06 09 64 67 73
27841

உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 25.11.2023 வெற்றி வாரம் 017 வர்ணம் நீலம்
K 8 5 9 3 9 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,229,659.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2283 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.11.25 தினம் சனிக்கிழமை
06 16 57 62 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,129,916/-

சனிதா
திகதி 2023.11.25 வெற்றி வாரம் 4444
17 28 61 73 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,942,028.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3995 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.11.25 தினம் சனிக்கிழமை
23 45 50 57 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 40 28 39 41 55
1459 சிவப்பு 2023.11.25 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 469,547,094.20

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2109
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,662,240/-
சீட்டிழுப்பு திகதி: 2023.11.25
08 15 16 72 N

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் - கொழும்பு

பகல்/இரவு

பயணிகள்/பொதிகள் சேவை

01.12.2023 முதல் தினமும்

காலை 6 மணி

மாலை 6 மணி

(C-7723)

**சுற்றுலா தகவல் நிலையம்**

வட மாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம்

யாழ்ப்பாண புகையிரத நிலையம்

**021 205 7132**

**077 968 0026**

## வேலையாள் தேவை

நெல்லியடியில் இயங்கி வரும் பல்சிகிச்சை நிலையத்திற்கு பெண் வரவேற்பாளர் தேவை. அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும்.

(C-7726)

**021 226 0000**

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

விசா சேவைகள்

(C-7730)

**V2 TRAVELS**

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-

பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777

v2vacancies@gmail.com

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(17459)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

## CANADA

## VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7730)

**0777-068-777**

49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்

V2 TRAVELS

## ICT வகுப்புக்கள் | திரு.இ.குமரன் ICT

R.Kumaran-B.Sc.

| GCE (O/L) | Grade 10 | Gr.6,7,8,9 |
|---|---|---|
| Theory / Practical Unit Exam | Theory / Practical Unit Exam | Theory<br>Practical<br>Unit Exam |
| Paper Class | Paper Class | Robotics |

Eng. & Tamil Medium

(17979)

யாழில் ICT இல் அதிக A சித்தி பெறும் நிறுவனம்

ICT துறையில் 20 வருட கற்பித்தல் அனுபவம்

100% Practical-Oriented Class

**Gr.6 -11 - Arduino / Robotics / Programming Classes**

MIS ICT COLLEGE TP:0776577359, #74, Sabapathy Lane, Jaffna & Kondavil East,Kondavil.

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378**

**076 097 3127**

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வயதான பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கும் சமையல் செய்வதற்கும் 40-55 வயதுக்குட்பட்ட நம்பிக்கைக்குரிய பணிப்பெண் தேவை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்

(17978)

**077 958 3573**

## காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 60 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**

- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

(17989)

**071 173 3911,**

**076 853 5022, 076 213 7239**

## விற்பனைக்கு

15 H.P மோட்டர் விற்பனைக்கு உண்டு.

ஏகாம்பரம் மில்

கல்வியங்காடு

(17983)

**077 998 2011**

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

யாழ். நகரில் தனியாக, குழுவாக

ஆண்டு 7 - GCE O/L

A/L பட்டதாரிகள்,

தொழில் புரிவோர்

K.GANESH B.A

(17982)

**077 766 8725**

## காணி விற்பனைக்கு

கீரிமலை மாதகல் வீதியில் கடற்கரை காணி 32 பரப்பு விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு

(17972)

**077 147 6526**

## அறைகள் வாடகைக்கு

A/L படிக்கும் மாணவிகளிற்கு சயன்ஸ் கோல், சயன்ஸ் வேல்ட் இற்கு அருகாமையில் அறைகள் வாடகைக்கு உண்டு.

(17978)

**076 387 1033**

## Happy Supermarket - உரும்பிராய்

**உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...**

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 309/= (Max 3Kg) |
| 1 Kg கோதுமை மா | - 181/= |
| 1 Kg Prima கோதுமை | - 189/= |
| 1 Kg றவை | - 289/= |
| 1 Kg அரிசி மா | - 193/= |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 297/= (Max 3Kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 435/= |
| 1 Kg தீட்டல் பச்சை | - 170/= |
| 10Kg விஜிதா நாடு | - 1950/= |
| 1 L தேங்காய் எண்ணெய்(Bulk) | - 575/= |
| 400g அங்கர் | - 1025/= ~~(1080/=)~~ |
| 400g sustagen | - 3400/= ~~(3900/=)~~ |
| 70g Baby Soab | - 108/= ~~(145/=)~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 137/= ~~(175/=)~~ |
| 180ml Chik Shampoo | - 370/= ~~(480/=)~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= ~~(80/=)~~ |

1025/=




~~1080/-~~

(18010)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 06 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 Km,
- திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 Km, நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 Km, திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 Km

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

(17975)

தொடர்புகளுக்கு : ஜெயம்

**077 814 7389,**

**077 986 5457**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org